ஆசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி

தமிழின்னும் வாழ்ந்ததிங்கே!

சொல்வகையும் பொருள்வகையும் மொழியறிவால்
தேர்ந்திலராய்
ஆரியர்தம் சூழ்ச்சிக் கொப்பப்
புல்வகையும் தேராத புல்லறிவோர் பயிர்வகையை
ஆராய்ப் புகுந்த வாறு,
பல்வகையும் பிழைபடவே பல்கலைதேர் கழகத்தின்
பேரகர முதலி யென்றோர்
சொல்தொகையைப் புறத்துமிழ்ந்து பொருள் தொகையை
விழுங்கினரே
செந்தமிழ்க்குப் புறம்பாய், அன்றே!

பொய்யாயும் புனைவாயும் தம்சரக்கைப் பலவிரித்துத்
தமிழகர முதலி யென்று; (அ)வ்
வையாபு ரிக்கூட்டம் செய்ததனைப் பாவாணர்
பலவாய்ந்து வரிசை காட்டி,
மெய்யான பேரறிவால் 'செந்தமிழ்ச்சொற் பிறப்பியல்(அ)
கரமுதலி' ஒன்று செய்யப்
பொய்யாத நாவினராய்ப் பொருளில்லாக் கையினராய்ப்
புலனழுங்கிப் புழுங்கி னரே!

(தொடர்ச்சி: 1-ஆம் பக்கம்.)

சுவடி: 11. ஓலை: 10,11. விலை ஓர் உருபா.

சுவடி: 11. ஓலை: 10,11. விலை ஓர் உருபா.

நமக்கு வந்த மடல்கள்.

0: 396: தங்களின், மலைநாடு. சிங்கப்பூர் செலவு சிறப்புடன் நிறைவடைந்து தாய்நாடு திரும்பியதற்கு மகிழ்வடைகின்றோம். தங்களின், மொழி, இன, நாட்டுப் பணியினைத் தாய்நாடன்றி வெளிநாடும் பெற்றிட அம்மக்களும் உண்மை உணர்ந்திடத் தொண்டாற்றி வந்த தங்களை இக்குடும்பத்தின் சார்பில் பாராட்டுவதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இதுபோன்றே உலகெங்கும் தமிழ் மக்கள் வாழும் பிறநாடுகளுக்கும் சென்று நம்மின மக்களுக்காகத் தாங்கள் ஆற்றும் தொண்டு சிறந்திட வேண்டுகின்றோம்.

—சுப. காளியப்பன்-செயலர்.
பாவாணர் தமிழ்க் குடும்பம்-நெய்வேலி.

0: 397: அன்பினிய பாவலர் ஐயா அவர்கட்கு, வணக்கம் திருச்சியில் மாநாடு கூட்டினோம், 'சாதி'க் கொடுமையைச் சாடினோம்;' இனி எதிலுமே 'சாதி' 'வாலை' வெட்டிவிட வேண்டும் எனச் சூளுரைத்தோம்; மகிழ்ந்தோம்; ஆரவாரம் செய்தோம்; கை தட்டினோம்! நாம் தன்மானம் மிக்கவர்கள்தாம்; உணர்வு மிக்கவர்கள்தாம்; எழுச்சி கொள்ளத் துடிப்பவர்கள்தாம்; பழமையின் மூடக் கொடுமைகளைக் களைந் தெறிய விழைபவர்கள்தாம்; ஆயின் அவற்றை யெல்லாம் முறைப்படுத்திச் செயல்படுத்த வழிதான் இல்லை!

எங்கள் மகளை உயர்நிலைப் பள்ளியில் 6 ஆம் நிலையிற் சேர்க்கச் சென்றோம். அவளின் 5ஆம் வகுப்புப் பதிவுச் சான்றில் (Record sheet) 'சாதி' என்பதற்கு நேராக எந்தச் சாதியும் குறிப்பிடாமல் தமிழர் என்று மட்டுமே குறித்துள்ளது. (தொடக்கப் பள்ளியில் அவளைச் சேர்க்கும் போது நாங்கள் அப்படிக் குறித்துத்தான் சேர்த்தோம்.) இதனைக் கண்ட அவ்வுயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், 'சாதி'யைக் குறித்துக் கொணர்ந்தால்தான் சேர்த்துக் கொள்ள இயலும் என்றும், 'சாதி' குறிக்காமல் சேர்க்க அரசக்கட்டளை ஏதும் இல்லை என்றும் கூறிப் பிள்ளையைச் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார். நாங்களும் 'சாதி' அறியாமைக் குறியைக் குத்தி அவளைப் பள்ளியில் சேர்த்துக் கல்வி புகட்டுவதை விட, தனிமாந்த உரிமையோடு,பகுத்தறிவு நினைவோடு ஓர் இழிவுக் குறியினின்று மீட்ட நிறைவோடு இருந்து விடுவதே மேலெனக் கருதிப் பள்ளியில் சேர்க்கவில்லை.

இந்த நிலைப் பகுத்தறிவாளர்கள் ஆட்சி என்று கூறிக் கொள்வோரின் ஆட்சிக் காலத்திலேயே இருக்குமானால், இந்த இழிவு ஒழிவதுதான் எப்போது. இது குறித்து, தாங்களும், ஆசிரியர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களும் கொண்ட ஒரு குழு அரசை அணுகி உடன் ஆவன ஏதேனும் செய்தால் என்ன? செய்தே ஆகல் வேண்டும். இதற்கிடையில், எங்கள் மகளைச் சேர்க்க என்ன செய்வது? எப்படிச் செய்வது? தங்கட்குத் தெரிந்து இதற்கு ஏதேனும் முற்காட்டோ, அதற்கான சான்றோ இருப்பின் எங்கட்குக் கொடுத்துதவுவதுடன், தங்களின் சீரிய கருத்துரையையும் மிக வேட்கையுடன் விரைந்து எதிர்பார்க்கிறோம்.

—மு. கதிரவன்-நெமலி. வ.ஆ.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க)

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

முன்மொழியாம் செந்தமிழ்க்கே ஒளிசேர்க்கும் அப்பணியை
மூதறிஞர் செய்வ தற்கே
தென்மொழியோர் திட்டத்தைப் பிறப்பித்துத் தந்திடவும்,
தீந்தமிழ்மேல் காதல் கொண்டோர்
பன்வழியாய்த் தொகைதிரட்டிப் புரந்திடவும், அப்பணியும்
பயின்றிடவும் தொடர்ந்த காலை,
வன்பழிவந் தெய்திவிடா வண்ணமென அரசேற்றுக்
கொண்டததை வளர்ப்பதற்கே!

1சிதலமைச்சர் பலரிருந்தார், 'பக்தவச்ச லங்'கள்போல்;
செந்தமிழை அரித்தெ டுத்தார்!
2புதலமைச்சர் சிலரிருந்தார் 'சுப்பிரமணி யன்'கள் போல்;
வடவர்முன் புதைந்து கொண்டார்!
முதலமைச்சர் அருட்செல்வர் செந்தமிழ்க்கும் நாட்டுக்கும்
மக்கட்கும் முழுதாய் எண்ணும்
முதல்அமைச்சர்! அவரெண்ணி முடித்தவற்றும் இப்பணியே
முதற்பணியாம்; முழுமைத் தொண்டாம்!

செந்தமிழ்க்குக் காப்பாகச் செய்கின்ற எப்பணியும்
முதற்பணியாம்; சிறந்த தொன்றாம்!
எந்தமிழ்க்குக் காப்பானர் பாவாணர்; அன்னவர்செய்
இணையற்ற பணிக்கே காப்பாய்
வந்தமர்ந்தார் முதலமைச்சர் அருட்செல்வர் என்றாலே
தமிழின்னும் வாழ்ந்த திங்கே!
வெந்தமிழ்வார் மனக்காழ்ப்பால் இனிமேல்தான் ஆரியரும்
அவரடிக்கீழ் வீழ்ந்துள் ளாரும்!

பொருட்செல்வர் பலரிருந்தார் அந்நாளில் புலவர்களைப்
புரப்பதற்கும் போற்று தற்கும்!
இருட்செல்லும் மக்களினை, எனவே, அப் புலவர்களும்
அறவழியில் ஏகச் செய்தார்!
மருட்செல்வர் அரசாண்டார் பின்னாளில்; புலவர்களும்
வாழ்க்கையின்றி மறைந்து போனார்;
அருட்செல்வர் அந்நிலையைத் தடுத்தாள முற்பட்டார்;
அரும்புலவோர் வாழ்ந்தார் இங்கே!

1: சிதல்—கறையான்; 2. புதல்—புதர்.

தென்மொழி

இலக்கிய இதழ்

"கொஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

சுவடி: 11, ஓலை: 10-11.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

இரட்டை-கடகம். தி- பி. ௨௲௫ - (சூன்-ஆக-1974.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

கலைஞர் வாழ்ந்தார்!

அரசியல் அமைப்புக்குச் சட்டம் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது ஒரு மொழிக்கு அகரமுதலி (அகராதி)யும். இனிச் சட்ட அறிவில்லாரும், சட்டத்தைப்பற்றி அறியாத பொது மக்களும், ஆட்சியியலுக்குச் சட்டத்தின் தேவையை எங்ஙன் உணர மாட்டாமல், அதால் என்ன பயன் என்று கேட்பார்களோ, அதேபோல் மொழியறிவற்ற மூங்கைகளும், மொழியின் சிறப்பை உணராத மூடங்களும், ஓர் இனத்தின் கட்டுக்கோப்பான வாழ்வியலுக்கு மொழி தேவையென்றும், அம்மொழியின் சிதைவற்ற நிலைப்பாட்டுக்கு ஓர் அகரமுதலி தேவையென்றும் உணரமாட்டார்கள். இனிப் பொதுவாக ஓர் அகரமுதலி என்பதற்கும் சிறப்பாகச் "செந்தமிழ்ச் சொற்பிறப்

பியல் அகரமுதலி'' என்பதற்கும் உள்ள வேறுபாடுகளையும் உயர்வு சிறப்புகளையும் பிறர் யாவரினும் தென்மொழியன்பர்கள் நன்கு அறிவர். அவ்வாறு அறியாதவர்களும் கடந்தகாலத் தென்மொழி யிதழ்களைப் பொதுவாகவும், அவற்றுள்ளச் "செந்தமிழ்ச் சொற் பிறப்பிய லகரமுதலி'' பற்றி எழுதப் பெற்றுள்ள கட்டுரைகளைச் சிறப் பாகவும் ஒரு முறை திருப்பிப் பார்ப்பார்களானுல் நன்கு உணர்ந்து கொள்வர். அறிவின் மேல் அக்கறை கொண்டவர்களுக்கு இஃது ஓர் அரிய செயலன்று.

இனி, செந்தமிழ்ச் சொற்பிறப்பிய லகரமுதலி யாது என்பதை உணர்வதைப்போலவே, பாவாணர் யாவர் என்பதையும் தென்மொழி படித்தவர்களைப்போல் வேறு எவரும் தெளிவாக உணர்ந்திருக்க மாட்டார்கள்; உணர்ந்திருக்கவும் வழியில்லை. இவ்வாறு பாவாணரை யும், அவர்தம் மொழிமூளைக் கொழுமையையும், அம் மூளைக் கொழுமையால் நம் செந்தமிழ் மொழி பெறப்போகும் செழுமையை யும் கண்டு காட்டிய முழுப் பெருமையும் தென்மொழிக்கே உரியது என்றுல் வரலாறு அறிந்த எவரும், ஏன் பாவாணரே கூட மறுக்க முடியாது. இன்னுஞ் சொன்னுல் தென்மொழி இதை ஒரு பெருமை பொருந்திய செயலாகத்தான் கருதியதேயொழிய பெருமை கருதும் செயலாக என்றும் எண்ணியதில்லை. பாவாணர்க்காகவே—அவரின் மொழியறிவுக் கதிரொளியைப் பரப்புவதற்காகவே தோற்றப் பெற்ற இதழ் தென்மொழி! தென்மொழி பாவாணரைக் கண்ணுக்குள்ளும் கருத்துக்குள்ளும் வைத்துப் போற்றியது; புரந்தது. அது தன் தொண்டாகக் கூட அதனைக் கருதவில்லை; கடமையாக, வாழ்வாகக் கருதியது. இதைத் தற்புகழ்ச்சியாகவும் தென்மொழி இங்கெழுத வில்லை; பாவாணர்ப் பராவுதலாகவே எழுதுகின்றது.

பதினேர் ஆண்டுகளுக்கு முன் பாவாணர்க்கு ஒரு பெருந்தொகை திரட்டி நல்கியபொழுதில் அவரைப்பற்றித் தென்மொழி எழுதியது இது:

உயிர்ப்பாடும் முக்கழகம்; உணர்வாடும்
　　தமிழ்க்குரிசில்; உறைந்த கட்டித்
தயிர்ப்போலுஞ் செழுஞ்சொல்லால் மொழிப்பெருமை
　　காத்துவருந் தமிழ்மா வேந்தன்;
அயிர்ப்பூறும் தமிழர்க்கு நினைவூட்டி
　　அயர்வகற்றும் தமிழ்ப்பே ராசான்!
செயிர்ப்பூறும் புலிப்பாய்ச்சால் அரிமாவின்
　　செந்நோக்கால் தமிழைக் காப்பான்!

கையெடுத்துத் தருகின்ற பொற்காசிங்
கொவ்வொன்றும் சேர்த்தெ டுத்த
பையெடுத்துத் தருமுணர்வால் பாவாணர்
வீறெடுத்துப் போரெ டுத்தால்,
பொய்யெடுத்து வீசுகின்ற புலையெடுத்த
நெஞ்சுடையார் நீட்டி வைத்த
கையெடுத்து வாலெடுத்துப் போகாரோ
காலெடுத்துத் தலைமேல் வைத்தே!

இருபது ஆண்டுகளுக்கு முன் என் முதற்பாவிய நூலாகிய கொய்யாக் கனியில், அப்பனுவலை அவர்க்குப் படையல் சாற்றி எழுதப் பெற்ற வரிகள் இவை:

பன்மொழி இலக்கணப் பரவை குளித்தெலா
நன்மொழி எனப்படும் நானில மொழிகளுள்
இன்மொழிப் பரலீ தெனக்கால் நிறுத்திய
தென்றமிழ் வாணர்ஞா. தேவநே யர்க்குப்
படையல் செய்தனன் பணிவொடும்
அடையும் மகிழ்வொடும் அவர்மா ணவனே!

இவ்வாறு தென்மொழி தன் வாழ்வையே பாவாணர் வாழ்வொடு பின்னிப் பிணைத்துக் கொண்டுள்ளது என்பதை மீண்டும் ஏன் இங்கெடுத்துக் கூறுகின்றோம் என்றால், பாவாணர் இதுவரை எங்கோ ஒளிந்து கொண்டிருந்தது போலவும், அவரை இப்பொழுது-தான் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்தது போலவும் சிலர் கையால் பேசி வாயால் முரசு கொட்டுகின்றார்களே, அவர்களை எண்ணி நகைக்கத்தான்!

அத்தகைய அருமைப் பாவாணர்க்குப் பெருமை தரும் செயலை ஒருவர் செய்தாரென்றால், அவரால் பாவாணர்க்குப் பெருமையில்லை; பாவாணரால்தான் அவர்க்குப் பெருமை.

உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து! (105)

—என்னுந் தமிழ்மறை இவ்வகையிலும் உரை நிறுத்தும்.

இனி, பாவாணரைப்பற்றிப் பெருமைப்படுவதற்கும் ஓர் அறிவெல்லை உண்டு என்றாலும், அவரை அறிந்து கொள்வதே அவ்வளவு பெருமைக்குரியதாகாது. ஓர் அறிஞரை அறிஞர் என்று அறியாமை

மிக்க ஒருவரும் சொல்லக்கூடும்; பெருமைப்படக் கூடும். ஆனால் அவர் சொல்வதற்கும் அறிவுமிக்க ஒருவர் கூறுவதற்கும் நிறைய வேறு பாடுகள் உண்டு. எனவே, பாவாணரை அறிஞர் அல்லது பேரறிஞர் என்று சொல்லி விடுவதாலேயே அறிவு பயன்படுத்தப் பெற்ற தாகாது. எப்படிச் சோற்றைச் சோறு என்று சொன்ன அளவி லேயே பசியடங்கி விடாதோ அப்படிப்பட்டது அது. எனவேதான் வெறும் சொற்பாராட்டுகளுக்கு நாம் மதிப்பளிப்பதில்லை.

ஒருவன் ஒன்றை அறிந்து கொண்டால், அவன் அதனை அறிந்து கொண்டதற்கேற்ப நடந்து கொள்கின்றனா என்பதைப் பொறுத்துத் தான் அவன் தன்மைகளை நாம் மதிப்பிடல் வேண்டும். பாவாணரை உண்மையான மொழிப் பேரறிஞர் என்று இன்று நேற்றன்று; ஏறத் தாழ ஏழு ஆண்டுகளுக்கு முன்பே, அறிஞர் அண்ணா அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள்: அவர்கள் 1967–இல் பாவாணரைப்பற்றி எழுதியது இது:

"பாவாணர் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் இடைவிடாத நற்றொண்டாற்றி நம் அனைவரின் நிலையினையும் உயர்த்தியவர். அவருடைய புலமை தெளிவும் துணிவும் மிக்கது. தமிழ் மொழியின் தூய்மையும் வளமும் எத்தகையது என்பதனை ஆய்ந்தறிந்து தெரிவித்த பெருமகனாரிடம், தமிழிடம் பற்றுக்கொண்ட எவருக்கும் பெருமதிப்பு ஏற்படாதிருக்க முடியாது. தமிழ்ப் பெருநூற்கள் தமிழரால் நன்கு கற்று உணரப்பட்டு, தமிழ் நெறியில் தமிழர் நின்று வென்றிடல் வேண்டுமென்பதில் தளராத விருப்பம் கொண்டோர்க்கெல்லாம் பாவாணரின் புலமை நம்பிக்கை தந்து வருகின்றது. பாவாணர் மேலும் பல ஆண்டுகள் இனிது வாழ்ந்திருந்து தமிழ் மொழிக்கான தொண்டாற்றி வருதல் வேண்டும். அப் பெரியாருக்கு என் வணக் கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வாழ்க பாவாணர்! வெல்க தமிழ்!"

இவ்வாறு பாவாணரை அண்ணா அவர்கள் உணர்ந்திருந்ததால்-தான், அவர் தலைமையேற்றிருந்த தமிழக அரசு பாவாணர்க்கன்று— அவர் செய்யவிருக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியலகர முதலிக்குத் தோள் கொடுக்க ஏழு ஆண்டுகள் ஆயின போலும்! இந்த ஏழு ஆண்டுகளைத் தமிழக அமைச்சர்கள் எப்படிக் கருதுகின்றனரோ நமக்குத் தெரியாது; ஆனால் இக்காலம் மறுமலர்ச்சித் தமிழ் வரலாற்றுப் பொத்தகத்தில் கிழித்தெறியப்பட்ட அரிய பக்கங்கள்; விடியும் தமிழின வரலாற்றில் பனி மூடிய இரவுகள்; தமிழ்நாட்டு வரலாற்றில் மணல் மேடிட்ட விளை நிலங்கள்! இவ்வேழாண்டுக் கால

எல்லையுள் நம் அமைச்சர்கள் பாவாணரைப் பொறுத்த அளவில் இன்னுங் கொஞ்சம் விழிப்போடு முன்னேடித்தனமாக எண்ணிச் செயலாற்றியிருந்திருப்பார்களானால், இந்நேரம் நம் மொழி, இன, நாட்டு அடிப்படையில் புதிய வரலாறே தோற்றுவிக்கப் பெற்றிருக்கும். இப்படிச் சொல்வதால் ஏதோ (!) நமக்கு அரசியல் தெரியவில்லை என்று எண்ணி நகைக்கும் பழுத்த அரசியல்காரர்களும் சிலர் இருக்கத்தான் செய்வர். அந்நிலை அவர்கள் முதுகில் அவரே தட்டிக் கொடுத்துக்கொள்ளும் செயலாகும். எனவே அதனை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை.

எப்படியோ, பாவாணர் அவர்களால் விளையவிருக்கும் ஓர் அரிய செய்லைத் தமிழக முதல்வர், கலைஞர் அருட் செல்வனூர் (கருணாநிதி) இன்றேனும் உணர்ந்ததும், அவர் சென்ற ஆண்டின் இறுதியில் திருவாரூர்த் திரு.வி.க. சிலை திறப்பு விழாவில் கூறியவாறு செயல்பட்டதும் தமிழினம் அனைத்துமே எண்ணி மகிழ்ந்து பாராட்டிப் பெருமையுறும் நிகழ்ச்சிகளாகும். பொதுவாகவே கலைஞர் அவர்களைப் பற்றி நமக்கு ஒரு நிலையான நம்பிக்கை உண்டு. அவர் பயின்றது பெரியார் பாசறை; அயின்றது அண்ணாவின் உளவகம்! இவற்றோடு அவர்க்கிருக்கும் தனித் திறத்திலும் நுனித்தறிவிலும் நமக்குற்ற நம்பிக்கை மிகவாகும். எனவே அண்ணா அறிந்து சொன்னதைக் கலைஞர் தேர்ந்து கொண்டார். இடையில் நடந்த நாட்கள் அளவிறந்தன. நடந்த கால்களும் அளவற்றன; அக் கால்களுள் குன்றக்குடியடிகளாரின் கால்களும் இருந்தன என்றால் அஃது அடிகளார்க்கன்று அவர் பூண்ட துவராடைக்கே மதிப்பாகும்! தமிழுக்கும் துவராடைக்கும் உள்ள தொடர்பு இளங்கோவடிகள் காலப் பழமையுடையது. அந்தத் தொடர்பைக் குன்றக்குடியடிகள் மெய்ப்பித்துக் குன்றக்குடிக்கே பெருமை தேடிக் கொண்டார்.

இனி, பாவாணரின் தலையாய பணிக்குத் தாழ் திறந்துவிட்ட கலைஞரின் நெஞ்சக் கதவுக்கு நாம் என்றும் நன்றிப் பூண் சூட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவர் செய்த, செய்யவிருக்கின்ற எப்பணிக்கும் இப்பணி ஒப்பரிய முதற்பணியாகும். அவரின் செயற்குரிய இச் செயலால் அண்ணாவின் புகழினும் அளவிறந்த புகழைப் பெற்றுள்ளார் என்பதைக் காலம் நிலைநிறுத்தும். அவர் செய்த செயல்கள் அத்தனையும் அழிந்து போகும்; அவரின் பிற பெருமைகள் ஆரவாரங்கள் அத்தனையும் மறைந்து போகும்; ஆனால் பாவாணரின் செந்தமிழ்ப் பணிக்குத் துணைபோகிய அவரின் தாளாண்மை தண்டமிழ்போல் என்றும் நிலைநிற்கும்.பொய்யா நாவிற் புலவர் பாடிய பெருமையுடைய

பண்டைத் தமிழரசர்களின் வரிசையில் கலைஞர் அருட்செல்வர் பெயரும் நின்று ஒளிவீசித் திகழும் என்பதில் துளியும் ஐயமில்லை.

இனி, செந்தமிழ்ச் சொற்பிறப்பிய லகரமுதலி நெறியாளராகப் பாவாணர்ப் பணியமர்த்தத்திலும் பலவகையான இயலாமைகள், நிறையாமைகள், கையிழுப்புகள், கால்வாரல்கள் முதலியன இருப்பன வாக அறிந்து கவன்றேம். புறத்தே பொறுப்புள்ளவராக மக்களுக்குக் காட்சிதரும் அமைச்சர் ஒருவரே பாவாணர்ச் செய்தியில் புறக்கணிப்பாளராகவும், இடையறுப்பாளராகவும் இருக்கின்ற செய்தி மிகவும் வியப்பளிக்கின்றது. அவருள்ளிட்ட அனைவருக்கும் கூறிக் கொள்கின்றேம்: பாவாணரை நெறியாளராக்கியது பெரிதன்று. அவர் செய்யவிருக்கும் பணியையும் நெறிப்பட இயங்குவதற்கு ஏந்து களும் செய்துதரப் பெறுதல் வேண்டும். அவர் பணிமேற்கொண்டு இரண்டு மூன்று மாதங்களாகியும் அவரும் அவர் துணையாளர்களும் இருந்து பணியாற்றுவதற்குரிய ஓர் அலுவலகத்தைக்கூட அமைத்துத் தராத நிலை ஒன்றே, நம் அரசு சொல்லினும் செயலுக்குத் தாழ்ந்த மதிப்பே கொடுத்துள்ளது என்பதற்கு ஒரு சான்ருக அமையும். இனி, இடத்தை விட இன்னும் முகாமையான செய்திகளும் உள. இவற்றை யெல்லாம் பாவணரின் கருத்தறிந்து அரசு செய்து தரும் என்றே நம்புகின்றேம். அதுவல்லாமல், பாவாணர்ப் பணியமர்த்தம் ஒரு வகையான தமிழ் விளம்பரமாகவே பயன்படுத்திக்கொள்ளப் பெற்றது என்பதுபோல் அரசு நடக்குமானுல், அது பெரிதும் வருத்தத்திற்கும் இகழ்ச்சிக்குமே உரியதாகும் என்று கூறிக்கொள்ள விரும்பு கின்றேம். செந்தமிழ்ச் சொற்பிறப்பிய லகரமுதலியின் பேராக்கத் திற்கு இடையூருகவிருக்கும் ஒரு சிறு துரும்பும் ஒரு பெரிய தூண் போலும் விளைவைக் கெடுத்துவிடக் கூடும் என்று அஞ்சுகின்றேம். இவ்வழிகளிலெல்லாம் கவனம் செலுத்தாமல், கொட்டை போட்ட வுடன், முளைவந்து விட்டதா என்று பார்க்கும் சிறுபயல்களைப்போல் நூல் தொடங்கி விட்டதா என்று பாவாணரையே பார்த்துக் கேட்பது நல்ல நகைப்பிற்குரிய செயலாகும். தென்மொழியால் தொடங்கப் பெற்ற இத்திட்டத்தை அரசு மேற்கொண்டதேனும், அதை ஒரு பெருமையாகக் கருதிக் கொள்ளாமல், பொதுமக்கள் தாங்கிய ஒரு திட்டத்தில் இயல்பாக ஏற்படும் நலிவு சுழிவுகளெல்லாம் அரசால் செப்பப்படுத்தப் பெறுதல் வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றேம். மக்கள் நிலையில் அதற்கிருந்த பொறுப்பு வேறு; அரசு நிலையில் அதற் கிருக்க வேண்டிய பொறுப்பு வேறு!

இனி, இத்திட்டத்திற்கு இதுவரை தென்மொழிவழித் துணை நின்ற அனைத்து அன்பர்களுக்கும், இதனை அரசு மேற்கொண்ட பின்னும்

முன் திட்டத்தில் சொல்லப்பெற்ற உறுதி மொழிகள் நிறைவேற்றப் பெறும் என்று மேலும் உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். இதுவரை தென்மொழியின் செ. சொ. பி. திட்டப்படி பாவாணர்க்குத் தொகை விடுத்துக் கொண்டு வரும் திட்ட உறுப்பினர்-கள், மேலும் அதனைத் தொடர்ந்து விடுத்து வரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம். பாவாணர்க்குச் செய்வது பைந்தமிழ்க்குச் செய்வதுபோல் பயன் கருத வேண்டாதது. அடுத்து, அவரின் பிற நூல்களும் இன்னும் அச்சில் வராமல் முடங்கிக் கிடக்கின்றன. அவை வெளிவரவும் அத்தொகை பயன்படுத்தப் பெறும். இதுபற்றியும் தென்மொழித் திட்டத்தின் பிற நிலைகள் குறித்தும், செ. சொ. பி.-யின் முடிவான விளக்கமான அறிக்கையொன்று விரைவில் தென்மொழியில் வெளிவரும். அவ்வறிக்கையின்படி அன்பர்கள் அக்கால் நடந்து கொள்ளலாம்.

எஃது எவ்வாறேனும், தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் சேர்ந்து ஒளிவிளங்கும் காலம் வந்து கொண்டிருக்கின்றது. அதற்கு உறுதுணையாக முன்வந்து நிற்பதில் அரசும் இணைந்துகொள்ளும் என்னும் உறுதி மொழியாகவே, கலைஞர் அரசு பாவாணர் அரும்பணிக்குக் கை கொடுத்துள்ளது. இத்தகைய அருமைப் பணியைச் செய்து பெருமை பெற்ற கலைஞரை இதுவரை வாழ்ந்தார் என்று சொல்வதைவிட, இனிமேல் வாழ்ந்தார் என்று சொல்வதே பொருத்தமும் பூரிப்பும் நிறைந்ததாகும். அவ்வகையில் அவர் புகழ் என்றும் நின்று நிலவுவதாகுக!



செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்.

அருந்தமிழ் அன்பரீர்!

வணக்கம். கடந்த தி. பி. உ௲௫ கடகம் ௧௩ (29—7—'74) திங்கள் அன்று சென்னை, தென்மொழி அலுவலகத்தில் ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனார் முன்னிலையில் தமிழன்பர்கள் கூடியிருந்து "செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்" என்னும் பெயரில் வரையறுக்கப் பெற்ற ஒரு நிறுவனத்தை அமைப்பதென்றும், அதற்கு ஒரு பங்கு ஓர் உருபா மேனி ஓரிலக்கம் பங்குகளைச் சேர்த்து விரைந்து செயல்படுவதென்றும் ஒருமனதாக முடிவு செய்யப் பெற்றது. தமிழன்பர்கள் விரைந்து கழகம் அமைக்கப் பல்லாற்றானும் துணைநின்று பங்குத் தொகையினை ஈந்துதவ வேண்டுகின்றோம்.

தொடர்பிற்கு:

"தென்மொழி"

51, அருணாசல (ஆசாரி)த் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

சிங்கை, மலையகச் செந்தமிழ்ச் செலவு.

—பெருஞ்சித்திரன்.

முன்னுரைக்கு முன் உரை!

'தென்மொழி' தொடங்கப் பெற்ற தி. பி. 1990 (கி. பி. 1959) ஆம் ஆண்டிலிருந்தே சிங்கப்பூர், மலையாவிற்கும் நமக்கும் நெருங்கிய ஒரு தொடர்பு இருந்து வந்தது. அது வெளிவந்ததை அந் நாடுகளில் உள்ள தமிழன்பர்கள் பலரும் இருகைகள் நீட்டி வரவேற்றுப் பாராட்டியும், அது தொடர்ந்து வெளிவருதற்கான பொருளுதவி செய்து புரந்து போற்றியும் வந்தனர். அக்கால், சிங்கப்பூர் மலையாவின் ஒப்பற்ற தமிழர் தலைவராகவிருந்து மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் ஆசிரியராக விருந்து நடத்தி வந்த **த மி ழ் மு ர சு** என்னும் நாளிதழில், 13—9—59 இல், பெரிய கொட்டையெழுத்துகளில், "**தென்மொழி-தூய்தமிழ் வளர்க்கத் தோன்றியுள்ள தாளிகை**"—என்னுந் தலைப்பிட்டு, செய்தித்தாளின் ஒரு முழுப்பக்கத்திலும் பாராட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது. அதில், "தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுதற் பொருட்டே ஒரு தாளிகை தோன்றுகிறதெனின், அத் தாளிகைக் கின்றியமையாத பெருந்தகுதி மொழித்துறைத் தகுதியாகும். இத் தகுதி முற்றிலும் வாய்ந்த தனித்தமிழ்த் தாளிகை தென்மொழி....! தமிழைப் பேணி வளர்ப்பதற்காக எழுந்துள்ள இத் தாளிகையைத் தமிழர் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொருவரும் (உறுப்பின ராகச் சேர்ந்து) வாங்கிப் போற்றுதல் வேண்டும். இது தமிழரின் முதற் கடமையாகும்..." என்பது ஒரு பகுதியாகும். அன்றும் சரி, இன்றும் சரி 'தென்மொழி'யை மட்டுமன்று, தமிழையும் தமிழ் அறிஞர்களையும் போற்றிப் புரக்கின்ற தன்மை தமிழகத்தை விட, சிங்கை மலையகத் தமிழர்களுக்கு ஒரு பண்பாடாகவே மலர்ந்து மணங் கமழ்கின்றது. இதனை அந்நாடுகளுக்குச் சென்றபொழுது இங்கிருந்து உணர்ந்ததைவிடப் பன்மடங்காக உணர்ந்து பெருமிதம் கொண்டேன்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் நெல்லிக்குப்பத்தில் நான்கணு விலையில் 1959ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற தென்மொழியின் இரண்டாவது இதழே மலையகத்திற்கு முந்நூறு விடுக்கப் பெற்ற

தென்றல் அங்குள்ள தமிழன்பர்களின் தனித்தமிழார்வத்தைச் சொல்லத் தேவையில்லை. முந்நூறுகத் தொடங்கிய இதழ்கள், இரண்டு மூன்று மாதங்களுக்குள் ஐநூறு அறுநூறுக வளர்ந்து விட்டது. அக்கால் திராவிட நாடு செய்தி முகவாண்மைக் குழு (Dravida Nadu News Agencies) என்னும் செய்தித்தாள் விற்பனை நிறுவனத்தை வைத்து நடத்திய திரு. இராசேந்திரன் என்னும் அன்பர் தென்மொழிக்கு ஓயாதுவிடுத்த மடல்களுக்கு என்னல் விடை -கள் கூட எழுத இயலாமற் போகும். அடிக்கடி அவர் தென்மொழிக்கு அன்பளிப்பாக விடுத்த, சில படங்களும். நாள்காட்டிகளும், நாட் குறிப்புகளும், கலைப் பொருட்களும் அவர் தென்மொழிபாற் கொண்ட அளவற்ற காதலை நன்கு புலப்படுத்தின. 1960இல் வெளியிடப் பெற்ற ஒன்றரை உருபா விலையுள்ள தென்மொழியின் முதற் பொங்கல் மலரில் ஏறத்தாழ ஐநூறு இதழ்கள் மலையகத்திற்குப் போனதென்றல், அங்குள்ளவர்களின் தனித்தமிழ் ஆர்வத்தை அக்கால் அளவிடவே முடியாமல் இருந்தது. அம் மலர் தமிழகம் முழுவதிலும் நானூறு படிகளே விற்றன.

இந் நிலையில் நாம் இன்னொரு கருத்தை அறிந்து கொண்டாகல் வேண்டும். தனித் தமிழ் இயக்கத்தின் தந்தையும், மூலவருமாகிய மறைமலையடிகள் அக்கால் (1902-இல்) தொடங்கி நடத்திய 'அறிவுக் கடல்' (ஞானசாகரம்) என்னும் தனித்தமிழ்த் திங்க ளிதழே இருநூறு படிகள் அளவில்தான் அச்சிடப் பெற்றது. அவைதாம் தமிழகம், வட இந்தியா, இலங்கை, மலேயா, பிசி, தென்னுப்பிரிக்கா, பர்மா முதலிய நாடுகளுக்கும் பகிர்ந்து விடுக்கப் பெற்றன. அவர் தொடக்கி வைத்த தனித்தமிழ் ஆர்வம் தென் மொழியால் மீண்டும் சுடர்விட்டு எரிந்தது என்பதை மெய்ப்பிப் பதற்கு இதனினும் வேறு சான்று தேவையில்லை. நாளாக ஆகத் தென் மொழி மொத்தத்தில் மூவாயிரம் படிகள் அச்சிடப் பெற்று, மலைய யகப் பகுதிகளுக்கு எழுநூறு, எண்ணூறு படிகள்போல் விடுக்கப் பெற்றன. தொடக்கத்தில் திரு. இராசேந்திரன் ஊக்கமாக இருந்து, பின் தென்மொழிக்குத் தரவேண்டிய பெருத்த நிலுவை யுடன் நோய்வாய்ப்பட்டுத் தென்மொழித் தொண்டை நிறுத்திக் கொண்டார். அதன்பின்னர் மலேயாவில், பேராக் (Perak) மாநிலத்தின் தலைநகரான ஈப்போவில் உள்ள ஈடில்லாத் தனித்தமிழ் அன்பரும், அங்குள்ள தனித்தமிழன்பர்களுக்கெல்லாம் வழிகாட்டியும் ஆசிரி

யரும், பாவாணர் தமிழ் மன்றத் தலைவருமாகிய பாவலர் குறிஞ்சிக் குமரன் என்னும் சா. சி. சுப்பையா அவர்கள் 1963 முதல் எவ்வகை ஊதியமும் கருதாமல் பல்வகை இழப்புகளோடு தென்மொழி விற்பனைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தொண்டாற்றி வந்தார். 1966 தொடங்கி அப்பொறுப்பை திரு. அழ. அழகிரிசாமி என்னும் பாவாணர் மன்றச் செயலாளர் ஏற்றுக்கொண்டு நான்கைந் தாண்டுகள் தொடர்ந்து பணியாற்றினர். அக்கால் தொடங்கித் தென்மொழி ஐநூறு அறுநூறு இதழ்களாகத் தொடர்ந்து சில ஆண்டுகள் மலையாவிற்குச் சென்று கொண்டிருந்தது.

எனவே, தென்மொழி ஓர் இயக்கமாகவே சிங்கை மலையகப் பகுதிகளில் வளர்ந்துவரத் தொடங்கியது. பொதுவாகவே அங்குள்ள தமிழர்கள் நம் தமிழகத்திலிருந்து எவர் எந்தத் தகுதியோடு அந் நாடுகளுக்குப் போனாலும், அவரைப் பலவகையிலும் வரவேற்றுப் பாராட்டிப் போற்றி வழியனுப்பி வைப்பதில் மிகவும் அக்கறை யுடையவர்களாக விருந்தாலும், தென்மொழிக்கென்றே உள்ள நம் தனித்தமிழ் இயக்க அன்பர்கள் மட்டும் இதில் தனி வளர்ச்சி பெற்று ஒரு முகமாக ஓர் உறவு மனப்பான்மையுடன் இயங்கி வந்ததை அங்கு நேரில் சென்றிருந்தபொழுது காண எனக்கு மிகவும் பெருமை யாக விருந்தது.

சிங்கை, மலையகப் பகுதிகளிலிருந்து தென்மொழிக்கு ஏராள மான மடல்கள் வந்து கொண்டேயிருக்கும். 1965ஆம் ஆண்டி லிருந்தே தமிழகத்திற்கு வரும் மலையா அன்பர்கள் பலர் அவர்கள் குடும்ப உறுப்பினர்களைக் காண விரும்பியது போலவே, தென் மொழி அலுவலகத்திற்கு வந்து என்னையும் தென்மொழிக் குடும்பத் தாரையும் கண்டு செல்வது வழக்கமாக விருந்தது. அவ்வக்கால் அவர்கள் சிறுசிறு அன்பளிப்புகளைப் பொருள்களாகவும் தொகைக ளாகவும் தந்து சென்றனர். தென்மொழிக்கென அவ்வப்பொழுது நன்கொடைகள் திரட்டப் பெற்று அங்கிருந்து விடுத்து வைக்கப் பெறும். நானும் குறிப்பிட்ட அன்பர் சிலர்க்கு அடிக்கடி மடல்கள் எழுதிக் கொண்டிருந்தேன். தென்மொழியளவிலன்றிப் பாவாணர் பாலும் என்பாலும் தனிப்பட்ட முறையில் அன்பும் மதிப்பும் வைத் திருந்த அன்பர்கள் அங்கு ஏராளமானவர்கள் உளர். அவர்களுள் தமிழகத்தைப் பார்த்திராதவர்களும், இங்குப் பிறந்திராதவர்களும் கூட நிறையப் பேர்கள் இருக்கின்றனர். என்னைச் சிற்சிலகால்

தாக்கிப் பேசிய ஓரிருவருடன் அங்குள்ள ஒருசிலர் மிகவும் வெகுண்டு கைகலப்பும் செய்து கொண்டதாக நான் கேள்விப்பட்டதுண்டு. நான் கட்டளையிட்டால் அங்குள்ள அன்பர் சிலர் வானூர்தியிலோ கப்பலிலோகூட வராமல் கடல் வழியாக நீந்தியே தமிழகத்திற்கு வந்து சேர அணியமாயுள்ளதாக, அங்கிருந்து என்னைக் காண வந்த அன்பர் ஒருகால் என்னிடம் சொல்லிப் பெருமிதப்பட்டுக் கொண்டார்.

மற்றும் தமிழகத்திலிருந்து சிங்கை மலையகப் பகுதிகளுக்குச் செல்லும் தமிழ்த் தொடர்பான தலைவர்களிடமும் அறிஞர்களிடத்தும் தென்மொழி பற்றியும், பாவாணர்பற்றியும், என்னைப்பற்றியும் அந் நாடுகளிலுள்ள அன்பர்கள் அடிக்கடி வினாக்கள் தொடுப்பதுண்டு. அவற்றிற்கெல்லாம் அவர்கள் நிறைவடையும் வகையில் அவர்களிடமிருந்து விடைவராமற் போனால் அவர்கள் அவர்களை ஏளனப்படுத்தியும் இகழ்ந்து கூறியும் வெறுத்தொதுங்கியும் போவதுண்டாம். இங்கிருந்து அங்கு நடந்த முதல் உலகத் தமிழ் மாநாட்டிற்குச் சென்ற திரு. கி. வா. சகந்நாதன், திரு. கருத்திருமன், திரு. மு. வ. முதலிய தலைவர், பேராசிரியர்களிடத்துத் தென்மொழியன்பர்கள் அவ்வகையில் தொடர்பு கொண்டதும், அவர்கள் நிறைவளிக்காத விடைகளைத் தந்ததுமான சில செய்திகளை ஏற்கனவே இங்குள்ள தென்மொழியன்பர்கள் அறிவார்கள். இங்கிருந்துபோன திரைப்படப் பாடலாசிரியர் **கண்ணதாசன்,** தி. மு. க. தலைவர் திரு. என். வி. **நடராசன்** முதலியோரும் அந்நிலைக்கு ஆளாகியுள்ளதாக அன்பர்கள் சிலர் மடல்வழித் தெரிவித்துள்ளனர். பேரா. இலக்குவனார் தம் மறைவுக்கு முன் அந்நாடுகளுக்குச் சென்று வந்த பொழுது அவர்க்கு உதவியாக இருந்தவர்களும் தென்மொழியன்பர்களே! தென்மொழியையும் இங்குள்ள தனித் தமிழியக்கத்தையும் அறியாத தலைவர்களை அங்குள்ள தமிழன்பர்கள் தாழ்வாகவே மதித்து வருவதையும் அங்கு நான் சென்றபொழுது அறியநேர்ந்தது. தென்மொழி இயக்கத்திற்கு ஆதரவு அளிக்காத தமிழக அரசை மதிப்புக் குறைவாக நினைத்து உள்ளம் வருந்தும் அன்பர் பலரையும் அங்குப் பார்த்தேன். இவையன்றித் தென்மொழி நடத்திய போராட்டங்களுக்கெல்லாம் அங்குள்ள அன்பர்கள் பலர் பல வகையிலும் துணை நின்றிருக்கின்றனர். கடந்த ஆண்டு மதுரையில் நடந்த தமிழக விடுதலை மாநாட்டுக்கு அங்கிருந்து இரண்டு படிநிகராளிகளையும் அங்குள்ள அன்பர்கள் அனுப்பி வைத்திருந்தனர்.

அதுவுமன்றி, என் புகைப்படங்களைக் கேட்டு அங்குள்ளவர்கள் அடிக்கடி மடல்களை எழுதிக் கொண்டிருந்தனர். அந்த அன்பர்களுக்கெல்லாம் "என் கருத்துகளைப் பரப்புங்கள்; என் உருவத்தைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டா" என்று நான் அமைதிப்படுத்தி மடல்கள் எழுதி வந்தேன். மொத்தத்தில் தென்மொழியோடு பல குடும்பங்கள் அங்குத் தொடர்பு கொண்டிருந்தன. அக் குடும்ப வுறுப்பினர்கள் அனைவரும் தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கின்றனர். இந்த நிலைகளால் சிங்கை, மலையாவிற்கு நான் சொல்லவேண்டுமென்று எனக்கும், வரவேண்டுமென்று அங்குள்ளவர்களுக்கும் ஒரு வேட்கை பெருகி வந்தது.

குறிப்பாகச் சென்ற ஏழெட்டு ஆண்டுகளாகவே என்னைச் சிங்கைக்கு அழைப்பதற்கான முயற்சி தொடர்ந்து நடந்து வந்தது. தென்மொழியின்பால் ஆராக்காதலும் அதன் கொள்கை முயற்சிகளில் அடங்கா ஊக்கமும் காட்டிவந்த மெய்ம்மைத் தமிழன்பர் பலர் தனித்தும் ஒன்று கூடியும் மடல் வழியாகவும், தமிழகத்திற்கு அவர்கள் வருகின்ற பொழுதும் தொடர்ந்து அழைப்புகள் விடுத்து வந்தனர். ஆனால் அவ்வப்பொழுது ஏற்பட்ட தமிழக அரசியல் மாற்றங்களால், அங்கிருந்தவர்களின் போக்கும் சிற்சில மாறுபாடுகள் எய்துவதும் மீள்வதுமாக, என் சிங்கை முயற்சி தொடர்ந்து தடைப் பெற்றே வந்தது. ஒரு முறை பாவாணரையும் என்னையும் இணைந்து எதிர்பார்ப்பதாகச் செய்தி வரும்; மறுமுறை நாங்களிருவரும் தனித் தனியாகத்தான் வரவேண்டியிருக்கும் என்று செய்தியில் மாற்றம் வரும். இந்த ஏக்க ஊக்கங்களுக்கிடையில் நான் சிங்கை வருவதில் சிங்கை மாதவி இலக்கிய மன்றத்தினர் பெரும் முயற்சி எடுத்து வந்தனர். அவர்களுள் அம் மன்றத்தைச் சார்ந்த கலியபெருமாள் என்று அழைக்கப்பெற்ற பாவலர் திரு. முல்லைவாணன் அவர்களும், பாவலர் திரு. அன்பரசன் அவர்களும் முகாமையான வர்கள்.

பாவலர் திரு. முல்லைவாணன் தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டத்தைச் சார்ந்த திருமுல்லைவாயில் என்னும் ஊரினர். அவர் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகவே தென்மொழியின்பால் அடங்காப் பேருணர்வு கொண்ட உள்ளத்தினர். அவர் 1967ஆம் ஆண்டுவாக்கில் சிங்கையிலுள்ள தென்மொழியன்பர்களின் உதவி யால் தென்மொழிக்கு ஒரு நாடாப் பதிவானை (Tap Recorder)

அன்பளிப்பாகக் கொணர்ந்தார். அந்த ஆண்டு இறுதியில் அவருடைய திருமணம் திருமுல்லைவாயிலில் என் தலைமையில் நடந்தது. திருமணத்திற்கு முன்னும் பின்னும் அவர் பலவகையிலும் தென்மொழிக்குத் துணைநின்ற பேரன்பினர். தென்மொழி பொருள் முட்டுப்பாட்டால் தளர்வுற்ற பொழுதெல்லாம், அதற்குத் தோகைத்தோள் கொடுத்துத் தாங்கிய அருள் நெஞ்சினர். தொடக்கக் காலத்துத் தென்மொழியின்பால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு விளங்கிய இளைஞர் பலர், தம் திருமணத்திற்குப் பின்போ, வாழ்வு நுழைவுக்குப் பிறகோ, தென்மொழித் தொடர்பைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்ட வரலாறுகள் பல உண்டு. அவர்கள் போலின்றி திரு. முல்லைவாணன் தொடக்கக் காலத்துக் கொண்ட தென்மொழித் தொடர்பையும் என்பால் கொண்ட பேரன்பையும் பெருமதிப்பையும் என்றும் எள்ளத்துணையும் குறைத்துக் கொண்டவரிலர். மாறாக அத் தொடர்பினை வைரம்போல் வலுப்படுத்திக் கொண்டவர். குழந்தை உளத்தினராய அவர் மற்றவர்கள் போலவே என் வலிய உணர்வுகளால் பற்பல பொழுதுகள் தாக்குற நேர்ந்ததுண்டு. அப்பொழுதெல்லாம் மற்றவர் போலின்றி, மனத்தில் எவ்வகைச் சிறு அசைவுமில்லாமல் என்னை முன்னினும் மேலாக மதித்தும் அன்பால் புரந்தும் பொருள் வகையால் எனக்குத் துணை நின்றுமே வந்துள்ளார். தென்மொழிக்கு அன்றும் இன்றும் அவர் ஓர் இரும்புத் தூண்போலவே விளங்கி வருகின்றார்.

(தொடரும்)

திரு.வி.க. உருவமைப்பு நாண்மலர்.

திருவாரூர் திரு. வி. க. சிலை திறப்பு விழாவின்போது தவத்திரு குன்றக்குடியடிகளார் தலைமையேற்று, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அருட்செல்வனார் திறந்த போது,

செந்தமிழ் ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களால் வெளியிடப் பெற்ற தனிச் சிறப்புடைய மணங்கமழ் மலர்!

அரிய செய்திகள்! அறிஞர்களின் கருத்துரைகள் அடங்கியது!
அன்பர்களிடமும் நூலகங்களிலும் இருக்க வேண்டியது!

தனித்து வாங்க விரும்பும் அன்பர்களும் மொத்தமாக வாங்க விரும்பும் மன்றங்களும் உடனே தொடர்பு கொள்க.

விலை: உரு. 6-00 இயற்றமிழ்ப் பயிற்றகம்,
அஞ்சல் செலவு தனி! திருவாரூர்.

அன்பர்கள் பொறுத்துக் கொள்க!

தென்மொழி இடமாற்றத்தால் இவ்விதழ் மிகக்காலந் தாழ்ந்து வருகின்றது. அன்பர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

—அமைச்சர்.

செய்திகள்.

இராமகிருட்டிணன்-தனமணி நீடு வாழி!

கடந்த இரட்டை ௨௩ஆம் நாள் (7—7—74) ஞாயிறன்று சீர்காழி, வள்ளுவக்குடியில் தென்மொழியன்பர் திரு. க. இராமகிருட்டிணன் அவர்களுக்கும் செல்வி தனமணிக்கும் தென்மொழி ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. ஆசிரியர்களும் அரசியல்காரர்களும் வாழ்த்துரைத்துச் சிறப்புச் செய்தனர். இறுதியில் திரு. க. இராமகிருட்டிணன் அனைவர்க்கும் நன்றியுரைக்க மணவிழா இனிது முடிந்தது. மணமக்கள் இன்புற்று நீடுவாழ தென்மொழியும் வாழ்த்துகின்றது.

கண்டனூர் தமிழியக்கப் பாசறையின் வீறு தமிழுக்கு விழா!

கடந்த இரட்டைத் திங்கள் ௩௰-ஆம் நாள் (14—7—74) ஞாயிறன்று முகவை, கண்டனூர் தமிழியக்கப் பாசறையின் சார்பில் வீறுதமிழுக்கு விழா பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் சி ஆ. நி. உ. பள்ளியில் சிறப்புடன் நடைபெற்றது. பேராசிரியர் இலெ. இராமநாதன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். திருவாளன்மார் பழ. கருப்பையா (முன்னாள் நகரப் பேராயக் கட்சித் தலைவர்) திரு. சே. நா. விசயராகவன் (மு. ந. பே. க. செ.) திரு. செம்பியனார் (உரிமையாளர் 'தமிழம்'), ஆகியோர் சொற்பொழி வாற்றினார்கள். திரு. மெ. மெய்யப்பன் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

காரைக்குடி இராமசாமித் தமிழ்க் கல்லூரி விழா!

முகவை, காரைக்குடி இராமசாமித் தமிழ்க் கல்லூரியில் கடந்த இரட்டை ௩௧-ஆம் நாள் திங்கள் (15—7—74) அன்று கல்லூரி முதல்வர் புலவர் திரு. இராமநாதன் அவர்கள் தலைமையில் விழா நிகழ்ந்தது. தென்மொழி ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தமிழம் உரிமையாளர் திரு. செம்பியனார் அவர்களும் பங்கேற்றுச் சொற்பொழிவாற்றினார். கல்லூரித் தலைவரும், மாணவ மாணவியரும் சொற்பொழிவாளர்களுக்குப் பகல் விருந்தளித்துச் சிறப்புச் செய்தனர்.

தென்மொழிக்கு நன்கொடை :

தஞ்சை நீடாமங்கலம் அரசினர் உயர் பள்ளி 9ஆம் வகுப்பு 'ஆ'(B) 'உ'(E) பிரிவுகளின் மாணவ, மாணவியர்கள் (4—7—74) தாம் தொகுத்த ௹ 30.00ஐ ஆசிரியர் திரு. ந. இளமுருகன் அவர்கள் வழித் தென்மொழிக்கு நன்கொடையாய் விடுத்து வைத்தார்கள். அவர்களின் தமிழ் புகுந்த நெஞ்சிற்குத் தென்மொழி தன் நெஞ்சுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

—அமைச்சர்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் விலைமாற்ற அறிக்கை.

தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் கடுமையான தாள்விலையேற்றத்தாலும், மை முதலிய அச்சகப் பொருள்களின் அளவிறந்த விலைக் கூடுதலாலும் தென்மொழியிதழின் விலையைக் கட்டாயமாக மிகுதிப் படுத்த வேண்டி ஆகிவிட்டது. நாங்களும் அன்பர்களின் வாங்குதிறன் கடுமையைக் கருதி இதுநாள் வரை பொறுத்திருந்தோம். இனிமேலும் பொறுத்துக்கொள்ள வியலாதவாறு இதழ் வெளியீட்டுச் செலவு மிகவும் கடுமையாகி விட்டது. எங்கு இதழை நிறுத்த வேண்டியிருக்குமோ என்றுகூட சிலவேளைகளில் எண்ணி அஞ்சுகின்றோம். என்றாலும் இதழின் விலையை ஒருவாறு கூட்டுவதன் வழி, நிலையை ஒருவாறு சரிப்படுத்திக் கொள்ளலாம் என்னும் முடிவின் மேல், இனி, தென்மொழி தனிப்படி ஒன்றின் விலையை ஓர் உருபாவாகவும் (பன்னிரண்டு இதழ்கள் சேர்ந்த) ஆண்டுக் கட்டணத்தைப் பன்னிரண்டு உருபாவாகவும் தமிழ்ச்சிட்டு—தனிப்படி ஒன்றின் விலையை 35 காசாகவும் (பன்னிரண்டு இதழ்கள் சேர்ந்த) ஓர் ஆண்டுக் கட்டணத்தை நான்கு உருபாவாகவும் வருத்தத்துடன் உயர்த்தியுள்ளோம். மெய்ம்மைத் தமிழன்பர்களுக்கு இவ்விலை மாற்றம் ஒரு கடுமையாகப் படாது. இவ்விலை மாற்றங்கள் இந்த இதழ் தொடங்கி நடைமுறைப் படுத்தப் பெறுகின்றன. அவற்றின் முழு விளக்கமும் வருமாறு:

தென்மொழி :

	உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	12·00	15·00	20.00
அரையாண்டுக் கட்டணம்	6·00	7.50	10·00
தனியிதழ்:	1·00	1·25	1·75

தமிழ்ச்சிட்டு :

ஆண்டுக் கட்டணம்	4·00	6·00	8·00
தனியிதழ்	0·35	0·50	0·65

இரண்டுக்கும் வானூர்திக் கட்டணம் தனி :

முகவர்கள் தென்மொழி ஓரிதழுக்கு 2 உருபாவும், தமிழ்ச்சிட்டு ஓரிதழுக்கு 0·75 காசும் முன்பணம் கட்டுதலும், ஒவ்வொன்றிலும் 10 படிகளுக்குக் குறையாமல் தருவித்தலும் வேண்டும்.

விளம்பரக் கட்டணம்

தென்மொழியில் மட்டும் :

அட்டைப் பக்கங்களில் விளம்பரம் செய்தற்கியலாது:

உள்ளே முழுப் பக்கம்:	100 உருபா
,, அரைப் பக்கம்:	50 உருபா
,, கால் பக்கம்:	25 உருபா
,, அரைக்கால் பக்கம்:	15 உருபா

12 இதழ்களுக்கு மேல் தொடர்ந்த விளம்பரங்களுக்குக் கழிவு 20 விழுக்காடு.

அமைச்சர், தென்மொழி, சென்னை–600005.

புலனடக்கம்!

—மெய்ம்மைப்பித்தன்.

எவ்வளவு எளியவன் நான்!
எவ்வளவு வலியன என் புலன்கள்!
புலன்களும் அவற்றைக் கனல்விக்கும் பொறிகளும், ஒரு நாளாயினும்,
ஒரு நொடிப் பொழுதாயினும்,
என் அறிவொடும், உளத்தொடும்
பொருந்துவதில்லையே— அஃது ஏன்?
நாவின் சுவைக்கு அடிமைப படுதல் கூடாது என்பது என் அறிவு.
நாவின் சுவை எத்துணை இழிந்தது! எத்துணைச் சிறியது!
மூப்பத்திரண்டு பற்களாலும, சில நொடிகளே
அரைபடும், அந்த உணவுப் பொருள்....
எவ்வளவு ஆசைகளை என்னுள் கிளர்வித்து விட்டது!
அதற்காக நான் அலைந்த அலைவு எவ்வளவு!
உழைத்த உழைப்பு எவ்வளவு!
அதனைப் பக்குவப் படுத்த முனைந்த முனைப்பில்தான் எத்துணை
ஆற்றல் செலவழிந்தது!
ஆசை! உணவு! ஆற்றல்!
மீண்டும், ஆற்றல், மீண்டும் அதே ஆசை, அதே உணவு!
மீண்டும் அதே உணவு, அதே ஆற்றல, அதே ஆசை!
எத்தனைப் பேருக்கு என்னால் வருத்தம்!
எத்தனைப் பேர் அதன் பொருட்டு எழுந்த என் பேச்சுகளாலும்
ஏச்சுகளாலும் முகம் சுழித்தனர்? என் ஆசையைக் கண்டு—;
—நாவின் அடக்கமற்ற தன்மையைக் கண்டு,
தீனிப்பையின் அங்காந்த பசியன்று;
நாவின் எம்பிக்குதிக்கும் பேராசை;
—அதைக் கண்டுதான் எத்தனைப் பேர் உள்ளூர நகைத்தனர்!
எத்தனைப் பேர் உள்ளூர எள்ளினர்!
என் காதுபட முணுமுணுத்தவர் எத்தனைப்பேர்?
—இருப்பினும் நாவுக்கு நான் அடிமையாக, வல்லடிமையாக,
ஏவலனாக, சொன்னால் தட்ட முடியாத முழு மூடனாக,
எவ்வளவு காலம் நடந்துவந்து விட்டேன்!
அறிவு சொன்னதை, சொல்வதைக் கேட்டது எது?

அதைக் கேட்க மறுத்தது எது?
அறிவா? அல்லது நாவா?
நாவுக்கு அறிவுண்டா? அறிவுக்கு நாவுண்டா?
அல்லது நாவுக்கும அறிவுக்கும் இடையில் நின்று போராடும்,
ஆசையின் பிறப்பிடந்தான் எது?
உள்ளமா? உயிரா? அல்லது உடலா?
நாவின் இனிப்பைச் சுவைத்தது எது?
அதன் கசப்புக்கு முகஞ்சுளித்தது எது?
அதன் தோய்வுக்கு அங்காத்தது எது?
உள்ளத்தின் வேலையா? உயிரின் வேலையா? அல்லது உடலின்,
அதன் ஒரு கூறுபாடாகிய உறுப்பின்-வேலையா?
நா, என்ன சொன்னாலும் வளைந்து கேட்பதற்கு, என் உள்ளம் ஏன்
அவ்வளவு முந்துதல் வேண்டும்?
என் அறிவு ஏன் அவ்வளவு துடித்தல் வேண்டும்?
உடலே ஓடியாடுகின்றதே!
ஒரு விரலளவு தசையின் ஆசை அடக்கலுக்கும் எழுச்சி
அமைதிக்கும், இந்தக்
குதிரளவு தசை எத்தனை முறை எழுந்து நெளிகின்றது...?
நூல் நிலையங்களைத் தேடிப்போக முரண்டு பிடுத்த என் கால்கள்,
காய்கறிக் கடைகளை நோக்கி எவ்வளவு விரைந்து சென்றன?
ஒரு நொடிப் பொழுதேனும் அமைந்து அறிவைத் தேடாத என்
கண்களும்

கைகளும், நாவுக்கு அடிமைப்பட்டுக்,
காய்கறிக் கடைக்காரன் முன் அமர்ந்து,
அமைவு பொங்க, கனிவு நிறைய, ஆசை குமிழியிட, அவன்
பரிவுக்குக்
காத்திருந்து, ஒவ்வொரு காயாக, மேனிப்பளபளப்புடன் உள்ளதாக,
பசுமை நிறைந்ததாக,
சொத்தை சுவடு அற்றதாக.
அடித்துப் பிடித்து, பிசுகி நசுகி,
கெஞ்சிக் கொஞ்சி, எத்துணை நயன்மை பேசிப்
பொறுக்கி எடுதது வந்தன!
அவற்றை அவையா உண்கின்றன?
இல்லையே!
பின், மேனிப்பளபளப்பாக, பசுமையாக இருக்க வேண்டும் என்று
கண் விரும்பியது ஏன்?
கைகள் புரட்டிப் புரட்டித் தேடினவே, அஃது ஏன்?
வயிற்றுக்காக அல்லாமல்,
நாவுக்காக, ஆமாம், முழுவதும் நாவின் குதப்பலுக்காக,
அவை குனிந்து குனிந்து நிமிர்ந்தனவே, அஃது ஏன்?
அண்டை வீட்டுக் காரனுக்காக இவ்வாறு ஓடியாடி உழைக்கும்

ஒருவனை நாம் பார்த்ததுண்டா? இல்லையே!
அண்டை உறுப்பு, தனக்கு அயலாக உள்ள நாக்கு,
தன் தசைத் தினவைத் தணித்துக்கொள்வதில்,
இந்தக் கால்களுக்கும் கண்களுக்கும், கைகளுக்கும்
என்ன அவ்வளவு அக்கறை வந்தது?
வயிற்றுக்குக் கூட அந்தக் கவலை யில்லையே!
எதைப் போட்டாலும் அவித்துத் தள்ளும் சட்டி போல,
எதை வைத்தாலும எரித்துத்தள்ளும் அடுப்புப் போல.
எவ்வகை ஆசைக்கும் இடம் வையாமல்,
எவ்வகை அங்கலாய்ப்புக்கும் செவி கொடாமல்,
'சோறே' என்று, ஏதோ ஒன்று, பசி நேரத்திற்கு, என்று
இவ்வளவு அமைதியாக இருக்கும் பொழுது,
இந்த நாவிற்கு மட்டும் எதற்கு இத்துணை ஆர்ப்பாட்டம்?
நாச்சுவைக்கு நான் அடிமையா?
இல்லையென்று சொல்கின்றது என் அறிவு!
பின் எதற்கு இத்துணை அலைச்சலும், புகைச்சலும்?
ஓ! இப்பொழுது புரிகின்றது!
நாவுக்குச் சுவையானதைத் தேடிக் கொடுத்தால்தான்,
அதன் புரட்டலுக்கும், சப்புதலுக்கும், அதன் விருப்பத்திற்குப்
பொருத்தமாக—ஒன்றைத் தேடிக் கொடுத்தால் தான்—
தன்னுள் சுரந்து வரும் எச்சிலை மேலும் மேலும் சுரப்பிக்கச்
செய்வதற்
காக, அது விரும்பும் ஒன்றை, பேராசைப் படும் ஒன்றைத்,
தேடிக் கொடுத்தால்தான்,
கண் தான் விரும்பும் ஒன்றைத், தனக்கு நிறைவான ஒன்றைப்,
பார்த்த மட்டிலேயே தன் நீல மேனி முழுவதும் குளிர்ந்து போகும்
ஒன்றை,
அந்த அழகுப் பொருளை, ஓவிய வடிவை,
படைப்பின் வெற்றியைத் தன்னால் தேடிக் கொள்ள முடிகின்றது!
அஃதாவது அவ்வாறு தான் தேடிக்கொள்ள அந்த நாக்கு
உதவுகின்றது!
அந்த நாவுக்குச் சுவையான ஒன்றைத் தான் தேடிக்கொடுத்து
அதன் தசைத்
தினவைத் தான் அடக்காவிட்டால் தன் சுவைக்கு நிறைவான
ஒன்றைத் தான் தேடிக்கொள்ளும்
நல்லுணர்வை அது தனக்குத் தராது-என்று கண் உணர்ந்திருத்தல்
வேண்டும்!
அந்த நாவுக்குச் சுவையான ஒன்றைத் தான் தேடிக் கொடுத்து,
அதன் எழுச்சியை
அடக்கா விட்டால், தன் சுவைக்கு நிறைவான ஒன்றைத் தான்
தேடிக் கொள்ளும்

நல்லுணர்வை அது தனக்குத் தராது என்று கைகள்
உணர்ந்திருத்தல் வேண்டும்!
அவ்வாறே கால்களும், செவிகளும்—
ஏன் உடல் உறுப்புகள் அத்தனையும்
கருதியிருத்தல் வேண்டும்!
ஒன்றின் எழுச்சியடக்கம், மற்றொன்றின் எழுச்சிக்கு
உதவுகின்றதோ?
நாவின் சுவையான உணர்வு, அதன் எழுச்சி, அதன் அடக்கந்தான்,
கட்புலனின் சுவையான நோக்கிற்கு நோக்கின் தேர்ச்சிக்கு
உதவுகின்றதாகக் கொள்ளலாமா?
நாவின் சுவையான உணர் வெழுச்சியின் அடக்கந்தான்,
செவிப்புலனின் சுவையுணர்ச்சிக்கு வேராக இருக்கின்றதோ?
அதன் சுவை எழுச்சிதான், அதன் பின்வரும் அடக்கந்தான்,
மெய்யுறழ்ச்சியின் தோற்றுதலுக்கு வித்திடுகின்றதோ?
அப்பொழுது,
உள்ளம் என்னும் நாக்கு, தன் தினவடங்கல் வேண்டிச் செய்துவரும்
முயற்சிக்குப் பொருள் என்ன?
அறிவு என்னும் நாக்கு, தன் தினவடங்கல் வேண்டிச் செய்து
வரும் அடங்காத முயற்சிக்கும் பொருள் என்ன?
எந்த ஒன்றின் மீதூர்ந்த சுவைக்காக, உள்ளத்தினதும்,
அறிவினதும்
நீண்ட நாக்குகள் அலைந்து புரள்கின்றன?
தசைத்திரளையாகிய நாக்கு, தசைப்பொதியாகிய உடல் உணர்வை
நோக்கிக் கூத்தாடுவதுபோல்,
உணர்வுத் திரளையாகிய உள்ளமும், அறிவும், உணர்வுப்
பொதியாகிய
மெய்யுணர்வை நோக்கிக் கூத்திடுகின்றதோ?
ஆம்!
நாவின் சுவையெழுச்சி யடக்கம், உடலின் கிளர்ச்சிக்கு வித்து!
உடலின் சுவையெழுச்சி யடக்கம உள்ள வூற்றுக்கு வேர்!
உள்ளத்தின் சுவையெழுச்சி யடக்கம், அறிவின் அங்காப்புக்கு
வித்து!
அறிவின் உணர்வெழுச்சி யடக்கம், மெய்யறிவின் ஆரா
வேட்கைக்குக் கொள்கலன்!
எழுச்சி யடங்குதல் வேண்டும்; எழாமல் அடக்கம் இல்லை!
ஒன்றின் அடக்கம், பிறிதொன்றின் எழுச்சி!
புலனடக்கம் மெய்யறி வெழுச்சி!

'திருவாரூரில் தமிழ்த்தென்றல்
திரு. வி. க. சிலை திறப்பு விழாவில்

கலைஞர் அருட்செல்வனார் சொற்பொழிவு!

0 அரசியலில் நடத்துகின்ற அமர்க்களத்தில் என்னுடைய உடம்பிலே ஏறிப் பாய்கின்ற நச்சுப் பற்களால் ஏற்பட்ட காயத்தில் ஊறிக் குமிழிடுகின்ற நஞ்சைப் போக்கிக் கொள்கிற மூலிகையாகத்தான் இத்தகைய தமிழ் மன்றச் சொற்பொழிவுகளை நான் கருதுகின்றேன்

0 இந்தத் தமிழ் விருந்து, ஓர் ஆறுமாதக் காலம் அரசியல் தொல்லைப் படுவதற்கான மாமருந்தாகப் பயன்படுமென்றால் அது மிகையாகாது.

0 திருவாரூரில் கடந்த நளி ௲ (2—12—73) அன்று நடந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க சிலை திறப்பு விழாவில் தவத்திரு. குன்றக்குடியடிகளார் அவர்களின் தலைமையில், தமிழக முதல்வர். தி.மு.க. தலைவர் பர்.மு. அருட்செல்வனார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு:

பேரறிஞர் பாவாணர் அவர்களே! பாப்பட்டி மன்றத்தினுடைய தலைவர் பெரும்புலவர் பெருஞ்சித்திரனார் அவர்களே! தமிழ்ச் சான்றோர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! அன்பர்களே!

இன்றைய விழா அழைப்பிதழிலே கண்டவாறு 'மழை பொழியினும் விழா வழாது நிகழும்' என்ற அளவில் நிகழ்ந்திருக்கிறது என்றாலும், இந்த மண்டபத்திற்குள்ளேயும் மழை பொழிந்து, அதிலே நாம் அனைவரும் நனைந்தவாறு இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கின்றோம். பொழிந்த மழை தமிழ் மழை! அந்த மழையைப் பொழிந்த முகில்கள் (மேகங்கள்) தமிழ் பயின்ற தமிழ் இலக்கியம் பயின்ற-தமிழ்ப் பாவியங்கள் (காவியங்கள்) பயின்ற முகில்கள் மட்டுமன்று-மன்னை-முகிலும் இங்குத் தமிழ் மழை பொழிந்த காட்சியைக் கண்டோம். (சிரிபபு)

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களுடைய திருவுருவச் சிலையைத் திருவாரூர் நகரத்திலே திறந்து வைக்கின்ற இந்த இனிய

விழாவினையொட்டி, காலையிலேயிருந்து ஆரூர் பெருமக்களும் அயலூர்களிலிருந்து வந்திருக்கின்ற தமிழ்ச் சான்றோர்களும் தமிழ்ப் பற்றாளர்களும் கருத்தரங்கம் பாவரங்கம் என்கின்ற வகையிலே தமிழை உண்டு களித்திருக்கிறார்கள். நான் இந்த விழாவில் மாலையி லேயே முதலில் பேசிவிட்டு, சட்டப் பேரவை அலுவல்களைக் கவனிக்க இரவிலேயே புகைவண்டிச் செலவைத் தொடர வேண்டியவனாக இருந் தாலும் கூட, வந்து அமர்ந்ததும் பாப்பட்டிமன்றம் முடிந்து விட்டதா என்று கேட்டு, தவத்திரு அடிகளார் இல்லையென மொழிந்ததும், 'அது முதலிலே நடக்கட்டும்; பிறகு நம்முடைய நிகழ்ச்சிகள் நடைபெறலாம்' என்று நான் கேட்டுக்கொண்டேன்.

குறிப்பாக இன்றைக்கு நான் இந்த விழாவிற்கு வந்ததே, கேட்கத்தானே அல்லாமல் பேச அன்று. நம்முடைய பாவாணர் அவர்கள் மொழியாராய்ச்சியை இந்த மேடையிலே நடத்திய பொழுது, நண்பர் மன்னை அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல், இன்னும் சிறிது நேரம் அந்த உரை நிகழாதா என்று நான் ஆர்வத் தோடு எதிர்பார்த்தேன். அவ்வளவு அரிய கருத்துகளை அவர்கள் இங்கு அள்ளி அள்ளி வழங்கினார்கள். அரசியலில் காலை முதல் மாலை வரை-ஏன்-நள்ளிரவிலே கூட-ஏன் விடியற் காலையிலே கூட தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கின்ற எனக்கு, இந்தத் தமிழ் விருந்து, இன்னும் ஓர் ஆறுமாதக் காலம் அரசியல் தொல்லைப் படுவதற்கு ஆன மாமருந்தாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது (கைதட்டல்)

நான் வேறு ஒரு நிகழ்ச்சிக்காக ஓர் எடுத்துக் காட்டைச் சொல்வது உண்டு. கீரியும் பாம்பும் சண்டை போட்டுக் கொள்ளுகிற நேரத்தில், பாம்பு மடிந்துவிடும் என்றாலும், பாம்பின் நச்சுப் பற்களால் பல்வேறு இடங்களில் உடம்பில் காயத்தை ஏற்றுள்ள கீரி, அந்த நச்சினைப் போக்கிக் கொள்வதற்காக தனக்கு மாத்திரமே தெரிந்த ஒரு மூலிகைப் புதரிலே போய் தன் உடம்பைத் தேய்த்துக் கொள்ளும் என்று கூறுவார்கள்; அது சரியோ தவறோ எனக்குத் தெரியாது. நான் அரசியலில் நடத்துகின்ற அமர்க்களத்தில் என்னுடைய உடம்பிலே ஏறிப் பாய்கின்ற நச்சுப் பற்களால் ஏற்பட்ட காயத்தில் ஊறிக் குமிழிடுகின்ற அந்த நஞ்சைப் போக்கிக் கொள்கிற மூலிகையாகத்தான் இந்தத் தமிழ் மன்றச் சொற்பொழிவு களை நான் கருதுகின்றேன். (கைதட்டல்) ஆகவேதான் அடிகளார்

அவர்கள். மேலவைக் கூட்டத்தில் அமர்ந்திருந்த பொழுது என்னை நோக்கித் "திருவாரூர் திரு.வி.க. சிலை திறப்பு விழா உங்கள் வருகைகாகக் காத்திருக்கிறதே! எந்த நாள் குறிப்பிடுகிறீர்கள்" என்று கேட்டார்கள். உடனடியாக நான் நாட்குறிப்பை எடுத்துப் பார்த்து இந்த நாளைக் குறித்துக் கொடுத்தேன். நாளைக்கும் நாளை மறுநாளும் சட்டப்பேரவை மேலவை நிகழ்சசிகள் தொடர்கின்றன என்றாலும், தொடர்ந்து பத்து நாட்களாகவே நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்றாலும், இந்த ஒருநாளை நான் ஓய்வு நாளாகக் கருதாமல் இந்தத் தமிழ் மன்றத்திலே கலந்து கொள்ளுகிற நாளாகத் நான் கொண்டதற்குக் காரணம் பொதுநலம் என்று கருதாதீர்கள்; என் தன்னலம்! அதுதான், மருந்தைப் பெற்றுப் போகலாம் என்ற தன்னலம்! மருந்தை இங்குப் பாடல்கள் பாடிய பாவாணர்களும் இந்தப் பாவாணர்க் கெலலாம் பெரும்பாவாணராகிய தேவநேப் பாவாணர் அவர்களும் அளித்திருக்கின்றார்கள்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. வாழ்க்கையிலே பெரும் பங்கு கொண்டது தமிழ்த் தொண்டா, பொதுத் தொண்டா? என்ற கேள்வியை இரு அணியினர் அவர்களாகவே எழுப்பிக் கொண்டு, ஒரு நாடகச் சண்டையை இங்கே நடத்திக் காட்டினார்கள். முன்னதாகவே எனக்கும் அறிவிக்கப் பெற்றிருந்தால், என்னையும் இதிலே இணைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டிருப்பேன். ஏனெனில் நான் கற்ற திறமையை-பாவரங்கத் திறமையை-தமிழகத்தில் பல்வேறு இடங்களில் காட்டியிருக்கின்றேன். சொந்த ஊரில் காட்டிப் பெருமை பெற வாய்ப்பிருந்திருக்கும். (கை தட்டல்) முன்னரே அறிவிக்கப் பெறாத காரணத்தால் அந்த வாய்ப்பினை இழந்தேன்; என் குற்றமன்று; அடிகளாரின் குற்றம்! (மீண்டும் கை தட்டல்) அடிகளார் நடத்துகின்ற பறம்புமலைப் பாரி விழாவில் ஆண்டு தோறும் பாட்டரங்கத் தலைமையேற்கும் வாய்ப்பினை அவர்கள் எனக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

நான் அரசு கட்டிலேறி அரசோச்சும் வாய்ப்பினை அண்ணா அவர்களோடு இணைந்தும், அண்ணன் மறைவுக்குப் பிறகு அவர்வழி நின்றும், ஆற்றிக் கொண்டிருக்கின்றேன் என்றாலும், தமிழ், தமிழர், தமிழ்த்தாயகம் தமிழர்களுடைய உயர்வு ஆகியவற்றுக்காகப் பாடு படுவது ஒன்றே இந்த அரசின் குறிக்கோள் என்கின்ற வகையிலே தான் ஆட்சி நடைபெறுகின்ற தென்பதை இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கின்ற நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

தமிழ்த் தொண்டா? பொதுத் தொண்டா? என்ற கேள்வி எழுப்பப் பெற்று, ஓரணிக்குத் தலைவராக என்னுடைய நண்பர் கோவை இளஞ்சேரன் அவர்களும், மற்றோர் அணிக்குத் தலைவராக திரு பாலசுந்தரம் அவர்களும இங்கே போரிட்டார்கள். இதிலே, தமிழத் தொண்டு என்று தலைப்பேற்றுப பாடியவர்கள் ஒன்றைச் சொல்லித் தங்களுடைய பகைவர்களைக் தோற்கடிக்க முயன்றிருக்கலாம். நீங்கள் தோற்றுவிடுவீர்கள் என்று கருதித்தான், உங்கள் அணியிலே ஒருவர் வராமலே இருந்து விட்டார் என்று-கூடப் பாடியிருக்கலாம். இதெல்லாம எனககுச் சொல்லத் தோன்றியவை. எனக்கு வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் (சிரிப்பு) உள்ளத்திலே வைத்து வருந்தி இதைச் சொல்லுகின்றேன். தமிழ்த் தொண்டும் பொதுத் தொண்டும் ஒருசேர, தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களுடைய வாழ்க்கையிலே விளங்கின என்பதை, இந்தப் பாப்பட்டி மன்றத்தினுடைய தலைவர் அன்புக்குரிய பெருஞ் சித்திரனார் அவர்கள் அழகுற விளக்கினார்கள். திரு வி.க. அவர்கள் 1917-ஆம் ஆண்டு கல்லூரிப் பேராசிரியராக இருந்து, அதிலே விடுபட்டுப் பொதுத் தொண்டுக்குச் சென்றார். இதை இந்த அணியிலே யாரும் படித்துப் பார்த்து அதையும் பாடியிருப்பார்களானால், அவர்களின் போராட்டத்திற்கு ஒரு கருவியாக இந்தச் செய்தி கிடைத்திருக்கும். கல்லூரிப் பேராசிரியராக இருந்தே அவர் தமிழ்த் தொண்டு ஆற்றியிருக்கலாமே, அவர் என் அதிலிருந்து விலகிப் பொதுத் தொண்டுக்கு வந்தார் என்று ஓர் அணி கேட்டிருந்தால் மறு அணி சற்றுத் திகைத்திருக்கும். திகைத்த அணி மீண்டும் திரு.வி.க.வின் வாழ்வை உற்று நோக்கியிருந்தால், பொதுத் தொண்டுக்கு வந்தவர் மீண்டும் இரண்டு நாட்களில் 'தேசபக்தன்' தாளிகையில் ஆசிரியரானார். அங்கேயும் தமிழ்த் தொண்டுதான் என்று அடுத்த அணி திருப்பித் தாக்கியிருக்கும். (சிரிப்பு) அடுத்த நடைபெறுகின்ற பாட்டரங்கப் போட்டியில் இவையெல்லாம் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக நான் சொல்லுகின்றேன். என்னை இணைப்பீர்களோ இல்லையோ? (சிரிப்பு) நினைவிலாகிலும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். (தொடரும்)

0 தமிழன்பர்கள் கையில் வைத்திருக்க வேண்டிய நூல்!

0 அறிவியல் மாணவர்களுக்கு இன்றியமையாத குறிப்புச் சுவடி!

கலைச்சொற் பட்டி-க.

வெளியீடு: தமிழியக்கப் பாசறை. தலைமையகம்,

காரைக்குடி-3.

வேண்டுவோர் எழுதிக் கேட்க!

(முன்னிதழ்த் தொடர்ச்சி.) நாடகம்

வயிரமூக்குத்தி.

—இறைக்குருவன்.

காட்சி 2

இடம்: அரண்மனைத் திருவோலக்க மண்டபம்.
நேரம்: முற்பகல்:
உறுப்பினர்: அரசன் (விசுவநாத நாயக்கன்)* அரசி, அரசவையோர், வாயிற் காவலன், அறச்சாலைக்கட்டளை.

அரசன்: அமைச்சரே! மழைவிட வில்லையே சற்றும்!
நமையே யன்றோ பழிவந்து பற்றும்?

அமைச்சர்: கோவே வாழி! நாடு முற்றும்
ஓவா மழையால் கூரைகள் இற்றும்,
வேலையுங் கூலியும் விறகும் அற்றும்,
சாலையும் மூலையும் சந்தியும் மற்றும்
ஆண்டாண்டு மக்கள் அவலப் பேச்சும்,
நீண்ட ஏக் கத்தால் விடும்பெரு மூச்சும்
நாளும் மிகுந்தன. நாடுநம் உடைமை.
ஆளும் அரசு காப்பது கடமை!

அரசி: அரைசே! மக்கள் தொல்லையைக் கொஞ்சம்
உரைப்பினும் உருகுகிற(து) என்றன் நெஞ்சம்!

அரசன்: நன்மையாய் மக்கள் வாழ்தலை நாடிப்
பன்னீ ராயிரம் பிராமணரைத் தேடிக்
கொண்டு வந்து மறையோது வித்து
வண்டி வண்டியாய்ப் பொருளும் அளித்துத்
தகுதி வாய்ந்த உறையுளும் கொடுத்துளோம்,
மிகுசுவை உண்டி நாள்தோறும் படைத்துளோம்.

அரசி: தொல்லைப் படுகிறது மழையினுல் நாடு;
ஒல்லையில் அதனைப் போக்கல்நம் பாடு!

அரசன்: வரும்பொரு ளுரைக்கும் பெருங்கணி யாரே!

பெருங்கணி: பெருக வாழ்க மன்னவ ரேறே!

அரசன்: என்று வானம் வெளிவாங்கும் என்று
நன்ருய்ப் பார்த்துக் கூறுக இன்று!

பெருங்: முழுதும் ஆய்ந்தேன், ஒருமாதம் முந்நாள்

---

* விசுவநாத நாயக்கன் காலம்: தி.பி. 1664 முதல் 1704 வரை

கழிதல் வேண்டும்; மழைநிற்கும் அந்நாள்.
[வாயிற்காவலன் வருகிருன்]

வாயிற்-காவலன்: அரைசே வாழி! அறச்சாலைக் கட்டளை
விரைவாய்ப் பார்க்க வேண்டுமாம் தங்களை.

அரசன்: இன்னே வரச்சொல்!

வா.கா: ஏற்றேன் உத்தரவு! [போகிருன்]

அறச்சாலைக் கட்டளை: மன்னவ வாழி!

அரசன்: என்னநும் விரைவு?

அ. சா. க: அடுப்பில் வைக்கத் துரும்பும் இல்லை.
நடுப்பகல் உண்டியும் சமைப்பது தொல்லை.

அரசன்: கடைப்புறக் கோட்டைக் கட்டைகள் தம்மை
உடைக்கச்சொன் னேனே அமைச்சரே உம்மை!

அமைச்சர்: கட்டளைப் படியே இடித்தோம் கட்டடம்
நெட்டைக் கம்பம், நெடுஞ்சரம், சட்டகம்,
நிலைக்கத வோடும், பலகணி, உத்திரம்,
துலைமரம், விட்டம், வளைகள், கைமரம்
எல்லாம் வெட்டி உடைக்கப் பட்டன;
ஒல்லையில் அட்டிலில் அடைக்கப் பட்டன.

அ.சா.க: நித்தலும் பன்னீ ராயிரம் பேர்கள்
மெத்தச் சுவையாய் உண்ணுகின் ருர்கள்.
முல்லை முகைபோல் சோறும், அற்றை
எல்லை கடவா நெய்யும், மற்றை
வறுவலும், கூட்டும், வதக்கலும், அவியலும்,
முறுகுறு துவட்டலும், மசியலும், துவைய்லும்,
பொரியல், சுண்டலும், புழுக்கலும், கடையலும்,
பெரிதும் விருப்புறு பொங்கல், வடையொடும்,
இன்சுவை மிக்க கன்ன லமுதும்,
இன்னண பலவும் இனிதே முழுதும்
நாடொறும் செய்து படைப்பதற் குப்படும்
பாடெலாஞ் பகரச் சொல்லெங்[கு] அகப்படும்?

அரசன்; ஒல்லையில் ஆவன செய்வோம் செல்க!

அ. ச. கா: நல்லது பெரும! கொற்றம் வெல்க!

அரசன்: இமைப்பொழு தும்இனித் தாழ்த்த லாகா(து)
அமைச்சரே அடுத்துச் செய்வ தியா(து)?

அமைச்: அரசே! நமது தலைநகர் எல்லை
முரசறை வித்தும் பயனுற வில்லை.

வரப் பெற்றோம்.

(நூல் நிறைக்காக வரப்பெற்ற நூல்கள் இவை. இவற்றில் சில பிறகு நிறைசெய்யப் பெறலாம்.)

அறிவனார் இயற்றிய **பஞ்ச மரபு.** (இசைத் தமிழ் நூல்)

இந்நூல் கடைக் கழகக் காலத்து இசைநூல் ஆகும். இதன் ஆசிரியர் அறிவனார். தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு என்னும் ஐந்திடங்களிற் றோன்றும் இசை பற்றிய மரபினை உணர்த்துவதால் 'பஞ்ச மரபு' என்னும் பெயரினை உடையதாயிற்று. இந்நூலின் ஏட்டுச்சுவடியைத் தேடிப் பாதுகாத்து வைத்தவர். திரு. வே. இரா. தெய்வசிகாமணி என்பவராவார். இது பொள்ளாச்சி தொழில் முனைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்களின் 'சக்தி' அறநிலைய வெளியீடாக வந்துள்ளது. பண்ணாராய்ச்சிப் புலவர் திரு. குடந்தை சுந்தரேசனார் அடிக்குறிப்பு எழுதிச் சிறப்பித்துள்ளார்.

இந்நூல் கிடைக்குமிடம்: திரு. ப. சுந்தரேசன், பண்ணாராய்ச்சி வித்தகர், 33. பேட்டை நாணயக்காரத் தெரு, கும்பக்கோணம், தஞ்சை (மா.வ). விலை: உரு. 7-50.

(முன் பக்கத் தொடர்ச்சி)

அரசன்: நினைத்துக் கூறுக நல்லதோர் ஏடல்!
அரசி: அனைத்தும் அரங்கன் திருவிளை யாடல்!
அரசன்: மறையவர் ஊண்அவர் நோகும் வண்ணம்
குறையுறின் கொடியேன் மடிவது திண்ணம்!
அரசி: நம்மனை யகத்தில் எரிவன இருப்பின்
இம்மென எடுத்துக் கொடுத்தல் நம்பொறுப்பு!
அமைச்: தட்டு முட்டுகள் போயின முன்னம்,
பட்டுடை மட்டுமே உள்ளன இன்னும்.
அரசன்: நன்று! நன்று! நீர் உடனே சென்று
பொன்றிகழ் பட்டுடை யாவையும் ஒன்று
விடுதல் இன்றிஎண் ணெய்யில் அமுக்குக!
சடுதியில் விடுதியில் கொடுபோய் இறக்குக!
அமைச்: உத்தர[வு] அரசே! (அமைச்சர் செல்கிறார்)
அரசன்: தேவி! நம் எண்ணம்
எத்திறத் தெனமால் ஆய்வது திண்ணம்.
அரசி: அரும்பே ரரங்கில் அறிதுயில் புரியும்
பெருமான் ஆடல்கள் யார்க்கே தெரியும்?

(தொடரும்)

கலைஞர் வாழ்க!

இது ஒரு பாடல் நூலாகும். இதன் ஆசிரியர் பாவலர் ச. பால சுந்தரம் அவர்களாவார்கள். இவர் கரந்தைப் புலவர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டுள்ளார்.

தமிழக முதல்வர். கலைஞர். பர். மு. அருட்செல்வனார் அவர்கள் தம் ஆளுமைத் திறன் எண்ணி வாழ்த்திப்பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல். இந்நூலாசிரியரின் பிற நூல்களில் கரந்தைக் கோவை, யான்கண்ட அண்ணா, யாழ்மொழி, அறமாமுகில் முதலியன குறிப்பிடத் தகுந்தவையாகும்.

இந்நூல் கிடைக்குமிடம்:— தாமரை வெளியீட்டகம், வடக்கு வீதி, தஞ்சாவூர்–1. தமிழ்நாடு.
விலை: உரு. 1–25.

புரவலர் உள்ளம்.

இதுவும் பாவலர். ச. பாலசுந்தரம் அவர்களின் பாடல் நூலேயாகும். ஆனால் இது பா நாடக நூலாம்.

பண்டைத் தமிழ் மன்னன் அதியமான், அவனின் அவைக்களப் புலவர் ஔவைக்கு தான் அரிதிற் பெற்ற நெல்லிக் கனியைக் கொடுத்து மகிழ்ந்த நிகழ்ச்சியினைக் களனாகக் கொண்டு அமைந்ததே இப்பா நாடக நூலாகும்.

இதுவும் மேற்குறித்த முகவரியிலேயே கிடைக்கும்.
விலை: உரு. 1–25.

முன்னேற்ற முழக்கம்.

இந்நூலாசிரியர் பாவோகி சுத்தானந்த பாரதியாராவார். இந்நூல் 126 பாடல்களில் தனித்தனிப் பொருள்களைப்பற்றி சமய அறிவுக் கண்ணோட்டத்துடன் பாடப் பெற்றது. சமய அறிவு வளர இந்நூலை அன்பர்கள் பயன் படுத்திக் கொள்வார்களாக. இவர் இருபதுக்கு மேற்பட்ட சமயச் சார்பு நூல்களை எழுதியுள்ளார்.

இந்நூல் கிடைக்குமிடம்! சுத்தானந்த நூலகம், ஒக சமாசம், அடையாறு, சென்னை–20. விலை: உரு. 1–50.



மக்களவை

ம: 192 பாவேந்தர் பெயரும் நகர மன்றத் தலைவர் செயலும்.

அன்புடையீர், வணக்கம். நான் மயிலாடு துறையில் (மாயூரம்) உள்ள தனியூர் வாணியத் தெருவில் வாழ்ந்து வருகின்றேன். நான் வாழ்ந்துவரும் தெருவின் பெயர் சாதியின் பெயரால் அமைந்துள்ளது. அதனால் அப்பெயரை மாற்றிப் பாரதிதாசன் தெரு என்று பெயர் வைக்கும்படி ஒரு கோரிக்கை எழுதி, அதில் எனது தெருவிலுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பத் தலைவர்களிடம் கையொப்பம் வாங்கினேன். நான்கு குடும்பங்களில் உள்ளவர்களிடம் மட்டுந்தான் கையொப்பம் வாங்க முடியவில்லை. அவர்களுக்குத் தங்களது சாதிப்பெயரைவிட மனமில்லை. அந்தக் குடும்பங்களில் உள்ளவர்களிடம் பலமுறை முயன்றும் அவர்கள் கையொப்பமிட மறுத்துவிட்டனர். எங்களது குடும்பு(Ward)க்குரிய நகரமன்ற உறுப்பினர். திரு. எசு. இரத்தினவேலு அவர்களும் மேற்கண்ட பெயர் மாற்றக் கோரிக்கைக்கு ஆதரவு தந்து, ஒருகோரிக்கை எழுதி, அதில் அவரின் கையொப்ப மிட்டுத் தந்தார். இரண்டு கோரிக்கைகளையும் நகர மன்றத் தலைவர் திரு. ம. மீ. செ. அபுல்கசன் அவர்களிடம் 28—11—73 அன்று நேரில் கொடுத்து, "அடுத்து நடக்கும் நகர மன்றக் கூட்டத்தில் கோரிக்கையை வைத்து முடிவெடுத்து அரசுக்கு அனுப்புங்கள்" என்று கூறினேன். நான் நேரில் நகர மன்றத் தலைவரிடம் கோரிக்கையைக் கொடுக்கும் போழ்து மயிலாடுதுறை, தலைமை சிவாசிகணேசன் சுவைஞர் மன்றத் தலைவர் திரு. கே. செல்வம் அவர்களும் உடனிருந்தார். அவர் பத்தாண்டுகளுக்கு முன் என் வகுப்பு மாணவ நண்பர். நகர மன்றத் தலைவர் எனக்கு நெருங்கிய பழக்க முடையவர். திரு. செல்வம் நகரமன்றத் தலைவரைத் தனியே அழைத்து அவரிடம் சில செய்திகளைக் கமுக்கமாகக் கூறினார்.

18—12—73 வரையில் நகர மன்றக் கூட்டத்தில் கோரிக்கை சேர்க்கப்படவில்லை என்று தெரிந்தவுடன் நகர மன்றத் தலைவரிடம்

தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "உடன் கோரிக்கைக்கு முடிவெடுக்கக் கூட்டத்தில் சேருங்கள்" என்றேன்; சரி என்றார். நான் வாழ்ந்துவரும் தெருவின் சார்பாகக் கொடுத்த கோரிக்கைக்கு 15—2—74 வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் 15—2—74-ஆம் பக்கல் நகரமன்ற உறுப்பினர் திரு. எசு. இரத்தினவேலு அவர்களிடம் கூறினேன். அவர் அடுத்து நடைபெற விருக்கும் கூட்டத்தில் கோரிக்கையைச் சேர்க்க வேண்டுமென ஒரு தீர்மானம் எழுதித்தந்தார். அதை 15—2—74 அன்று நகர மன்றத் தலைவரிடம் கொடுத்தேன். பெயர் மாற்றக் கோரிக்கைக்கு நகர மன்றத் தலைவரிடமிருந்து, "தமிழ்நாடு அரசு 9—1—74-ஆம் பக்கலில் (பொது தேர்தல்-6) துறையின் 19949/73-6 எண் குறிப்புக் கட்டளையில் அடுத்து நடைபெறும் நகராட்சி மன்றத் தேர்தல்கள் முடியும் வரை தெரு பெயர் மாற்றங்களுக்கான எந்தவித முன்மொழிவுகளையும் (Proposals) அனுப்பக் கூடாது, என அரசு கட்டளை யிட்டுள்ளதால் தங்களது தெரு வாழ் மக்களால் கொடுக்கப்பட்ட கோரிக்கைக்குத் தற்போது முடிவெடுக்க இயலவில்லை" என்று எனக்கு 21—2—74ஆம்பக்கலில் கடிதம் எழுதியிருந்தார்.

நகர மன்றத் தலைவர் வேண்டுமென்றே காலந்தாழ்த்திச் செய்த இச்செயலைக் கண்டித்து, எனது தெரு அனைத்துக் கட்சி நண்பர்களும் நகராட்சி முன்னிலையில் உண்ணா நோன்பு இருக்க வேண்டுமென்று, என்னிடம் கூறினார்கள். இதற்கு நான், "உண்ணா நோன்பு தேவையில்லை; நகர மன்றத் தேர்தல் முடிந்தவுடன் நாம் பெயர் மாற்றக் கோரிக்கையைக் கொண்டு வருவோம்," என்று அவர்களிடம் கூறினேன். நகரமன்றத் தலைவருக்கு நான் "19-3-74-ஆம் பக்கலில், 28-11-73 முதல் 9—1—74 தமிழ்நாடு அரசு கட்டளை யிட்டுள்ள நாள் வரையில் மூன்று நகர மன்றக் கூட்டங்கள் நடந்துள்ளன. மூன்று கூட்டங்களில் ஒரு கூட்டத்தில் எங்களது தெருவின் கோரிக்கைக்குத் தீர்வு கண்டிருக்கலாம். 9—1—74-ஆம் பக்கலிட்ட அரசின் கட்டளையைக் காட்டுவது முறையன்று; தங்களுக்குப் பாரதிதாசன் பெயரில் உள்ள காழ்ப்புணர்ச்சியால் இவ்வாறு செய்துள்ளீர்கள்," என்று கடிதம் எழுதியுள்ளேன். இஃது எங்களது பழைய பேராயக்கட்சி நகர மன்றத் தலைவரின் முறையற்ற செயல். இவற்றையெல்லாம் பார்க்கும் போழ்து:—

அரசியல் தெளியா மாந்தரிங் கொருபால்;
அறம்பிழை வாணிகர் ஒருபால்;
வரவியல் செலவியல் அறிகிலர் ஒருபால்;
வருவதை முடக்குவர் ஒருபால்;
கரவுளம் ஒருபால்; குலவெறி வளர்க்கும்
கயவரும், களியரும் ஒருபால்;
இரவினும் திண்ணிய மடமை கொள் நாடே
எங்கொளி பெருகுவதினியே!—என்ற
பாவலரேறு பெருஞ்சித்திரனர் பாட்டல்தான் நினைவிற்கு வருகின்றது.

மயிலாடுதுறை
கசு, விடை உயிலி.
30—5—1974.

தங்களன்புள்ள,
வை. கந்தசாமி.

ம: 193: ஆங்கில மொழியின் குறைகளை ஆரியப் பார்ப்பனர்கள் அறிந்து கொண்டனர்.

ஐயா! நான் கேள்வியுற்ற நிகழ்ச்சியொன்றை இங்கு, 'தென்மொழி' அன்பர்களின் கவனத்திற்குத் தருகிறேன். ஒரு தையற்காரர் தனது கடையின் பெயர்ப் பலகையை ஆங்கிலத்தில் 'Rama Tailors' என்று எழுதி வைத்திருந்தார். அங்கு உடை தைக்க வந்த ஒருவர் அக்கடையின் பெயரை 'ரமா டெய்லர்' என்று வேடிக்கையாகப் படித்தார். தையற்கார நண்பரோ கடையின் பெயர் 'ராமாடெய்லாசு' என்றும் 'ரமா டெய்லர்' என்று படிக்கக் கூடாது என்றும் கூறினர். இதுபற்றி இருவருககும் வாய்ச்சண்டை முற்றவே உடை தைக்க வந்தவர் சினம் கொண்டு வெளியேறினர். அந்தப் பெயர்ப் பலகையைத் தமிழில் எழுதி வைத்திருந்தால் இச்சிக்கல் ஏற்பட்டிருக்காது என்பது திண்ணம். இஃது ஏறத்தாழ ஆறுண்டுகட்கு முன் நிகழ்ந்தது.

தமிழகத்திலுள்ள ஒரு சில முடத்தெங்கு-மாந்தர்கள், பிறமொழி எழுத்துகளான F', 'ஜ', 'ஷ' போன்றவற்றைத் தமிழ் எழுத்துகளாகத் தழுவிக் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். அவர்கள் மேற்சொன்னவாறுள்ள, ஆங்கில மொழியின், பலுக்கல் முறைக் குறைபாட்டையும், சில ஆங்கில எழுத்துகள் சொல்லில் இணையும் போது ஒலியற்றுப் போகும் குறையையும் (காட்டாக Debt = Det) (தமிழ் மொழியில் இக்குறை முற்றிலும் இல்லை), இவை போன்ற இன்னும் பல குறைபாடுகளையும் ஆங்கில மொழியறிஞர்களுக்குச் சுட்டிக் காட்டலாமே! இவர்கள் எதனல் அவ்வாறு செய்ய விரும்பாமல் தமிழை மட்டும் குறைத்துப் பேச வேண்டுப? வடமொழிக்கு உயிர் உள்ளது என்று வழக்குரைக்க வரும் இவர்கள் ஆங்கில மொழியைக் கண்டு ஏன் ஒதுங்கிப் போக வேண்டும்? ஆங்கில மொழியின் மீது கொண்டுள்ள ஆசையா, காதலா, மதிப்பா அல்லது ஆங்கில

மொழியறிஞர்களால் தங்களது 'அறியாமை' வால்கள் அறுக்கப்பட்டு விடும் என்ற அச்சமா?

ஆங்கில மொழியின் மேற்குறிப்பிட்ட குறைகளை உணர்ந்து தானோ என்னவோ "இந்து" (The Hindu) நாளிதழ் வழக்கமாக வெளியிட்டு வரும் இறை (மெய்ப் பொருள்) விளக்கப் பொழிவு பற்றிய செய்திகளில், சில நாட்களாக, இராமா, இராவணா, நாயன்மார், போன்ற பெயர்களில் உள்ள 'ஆகார' ஓசையை விளக்க விரும்பி ஆங்கிலத்தில் 'Raama' 'Raavana', 'Naayanmaar' என்று திருத்த மாக எழுதி வருகிறது.

ஆரியப் பார்ப்பனர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து திருத்திக் கொண்டுவிடும் சூழ்நிலை உருவாகி உள்ள இந்நாளிலும் கூட, தம் தாய்மொழியைப் பகடிக் குள்ளாக்குவதில் மகிழ்ந்து போகும் (கண்ணதாச, சயகாந்த, மீனாட்சிசுந்தர, பக்தவத்சல, சுப்பிரமணிய, வையாபுரி) அடிமைத் தமிழர்கள் திருந்தவேமாட்டார்களா?

—இறை மகிழ்நன், தஞ்சாவூர்.

ம: 194: கண்ணதாசனா 'அறிவு'

ஐயா! எங்கள் கல்லூரியில் கல்லூரி ஆண்டுவிழா கடந்த 2-3-74 அன்று நடைபெற்றது. சிறப்புச் சொற்பொழிவுக்காகக் கண்ணதாசன் வந்திருந்தார். என்னைப் போன்ற மாணக்கர்கள், இன்று தமிழ் பற்றி நிறையப் பேசுவார்; தமிழின் சிறப்புக்களைக் கூறுவார் என்று எதிர்பார்த்தோம். ஏமாற்றமடைந்தோம். பேசியது எல்லாம் காமம் பற்றியே. கள்ளுண்டு களித்துக் கன்னிகளிடம் காலத்தைக் கழித்தால், இறுதியில் அறிவு கிட்டும் என்ற கருத்தே அவர் பேச்சின் சாரம்.

அவர் பேச்சுக்காக எல்லோரும் காத்திருந்தனர். அவரின் ஒன்றுக்கும் உதவாப் பேச்சு முடிந்தவுடன் மாணவர் கூட்டம் கலைந்தது. அதற்குப் பின்னால் திருவாட்டி **மணியம்மையார்** தலைமையுரை ஆற்ற வந்தனர். அப்பொழுது அதைக் கேட்க அதிக மாணக்கர்கள் இல்லை. என்னைப் போன்றோர் மிகவும் வருத்தமுற்றோம். தன் வாழ்நாளெல்லாம் தமிழனின் மானத்தைக்காக்கப் போராடிய தலைவனின் தலைவிக்கு வரவேற்பில்லை. ஆனால் தமிழுக்குத் தீங்கு செய்கின்ற பாட்டுகளைப் புனையும் ஒரு திரைப்படப் பாட்டாசிரியனுக்கு என்னே வரவேற்பு!

இக்கடிதம் எழுதும் நோக்கம் யாதென்றால், திரு. கண்ணதாசன் உண்மையிலேயே தமிழுக்குத் தொண்டு செய்கின்றாரா அல்லது தீங்கு விளைக்கின்றாரா என்பதை அறிய என்போன்றோர் விழைகின்றோம். அவரின் பாடல்கள் பற்றிய ஆராய்ச்சி விரைவில் தென்மொழியில் வரவேண்டும் என்று யான் விழைகின்றேன். என்போன்றோரின் ஆவலை நிறைவேற்றுவீர்கள் என்று நமபுகின்றேன் உங்களது தொண்டும், வாழ்வும் வளரட்டும்! அன்பன், ம. கலியமூர்த்தி.

பெரியார் ஈ. வே. இரா. கல்லூரி, திருச்சி. 620020

(முன்னிதழ்த் தொடர்ச்சி.)

பாவேந்தர் பாரதிதாசன்.

—பெருஞ்சித்திரன்.

(காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் 9—2—73 இல் நடைபெற்ற முத்தமிழ் விழாப் பாட்டரங்கில் பாடியது.)

எடுத்துக் காட்டாய் இரண்டொரு பாடல்கள்
மடுத்துக் கேட்போம்! மாண்பது விளங்கும்!
காலை, கதிர் கடல், செம்பொன் வானம்!
கோலக் காட்சியைப் பாவலன் கூறுவான்:

எழுந்தது செங்க திர்தான்
கடல்மிசை! அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூறல்!
வெளியெலாம் ஒளியின் வீச்சு!

'அழகின் சிரிப்பு' எனும் நூல், அவர் சுவைத்த
இயற்கை ஓவியக் கோப்பென் றியம்பலாம்!

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தை, உடல் ஒவ்வொன்றும் சிலிர்க்கச்
செல்வம்ஒன்று வருமதன்பேர் தென்றற் காற்று!

இருள்போய் ஒளிந்த இடத்தைத் தேடி
அருள்தோய் பாவலர் அடைந்ததைக் காண்மின்!

" அடுக்கிதழ்த் தாம ரைப்பூ
    இதழ்தோறும் அடிப்புறத்தில்
படுத்திருப் பாய், நீ" என்றே
    இருளினைப் பாடுகின்றார்!

களிச்சிறு தும்பி பெற்ற
கண்ணாடிச் சிறகில் மின்னித்
துளிச்சிறு மலர்இ தழ்மேல்
கூத்தாடித் துளிதேன் சிந்தி,
வெளிச்சிறு பிள்ளை யாடும்
பந்தோடு விளையா டிப்போய்க்
கிளிச்சிற காடை பற்றிக்
கிழிக்கின்றாய் தென்ற லே, நீ!

செருந்தி, ஆச்சா, இலந்தை
தேக்கீந்து, கொன்றை, எல்லாம்
பெருங்காட்டின் கூரை! அந்தப்
பெருங்கூரை மேலேநீண்ட
ஒரு மூங்கில்; இரு குரங்கு
கண்டேன் பொன் னூசல் ஆடல்!

ஆனையொன் றிளம ரத்தை
முறித்திடும்; ஆந்தைக் கூட்டைப்
பூனையொன் றணுகும்; அங்கே
புலியொன்று தோன்றும்; பாம்பின்
பானைவாய் திறக்கக் கண்டு
யாவுமே பறக்கும்; கன்றோ
மானைக் காணாது நிற்கும்!
அதைஒரு நரிபோய் மாய்க்கும்!

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்குதொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கென இழுத்ததைப் போல்
கிளைதொறும் தாவித் தாவி
விழுதெல்லாம் தொங்குகின்ற
ஒளிப்பாம்பாய் எண்ணி அஞ்சி
உச்சிபோய் தன்வால் பார்க்கும்!

காட்டிடை நடந்ததொரு காட்சியைப் பாவலர்
காட்டும் வகையிது! காணுங்கள் மேலும்!

அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே!
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர் மணியின் குப்பை!
குறத்தியர் கவண்எ டுத்துக்
குறிபார்க்கும் விழி,நீ லப்பூ!
எறியும்கை செங்காந் தட்பூ!
உடுக்கைதான் எழில் இடுப்பே!

தத்தும் அருவியாய்த் தாவும் கருத்துகள்!
முத்தும் பவழமும் வயிரமும் மிடைந்த
பன்மணி மாலை! பாவியக் கொத்து!
என்வகை யாயிதை இயம்புவேன்? கேளீர்!
வெள்ளப் பெருக்கை விரிப்பதைக் காண்மின்!

இருகரை ததும்பும் வெள்ள
நெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள்! நுரையோ முத்துத்
தடுக்குகள்! சுழல்மீன் கொத்தி
மரகத வீச்சு! நீரில்
மிதக்கின்ற மரங்களின் மேல்
ஒருநாரை, வெண்டா ழம்பூ!

எதுகை மோனைக்கு இரவானம் பார்க்கும்
புதிய தலைமுறைப் புழுக்கை யலன்,அவன்!
அகர முதலியைத் தேடி அலையும்
பகற்கனு காணும் பாவலன் அல்லன்!
எண்ணிய பொழுதெலாம் எதிர்வந்து நிற்கும்
வண்ணச் சொற்கள்! வனைகின்ற ஓவியம்!
பாடிக் கொண்டே பறக்கும் வண்டுபோல்
நாடிக் கொண்டே நாட்டிடும் பாவலன்!
இதோ பாருங்கள் இன்னொரு பாடல்!
எதோ, இதன்பொருளை எண்ணுங்கள் பார்க்கலாம்!

இருநிலா இணைந்து பாடி
இரையுண்ணும் செவ்வி தழ்கள்
விரியாத தாம ரைபோல்
ஓர் இணை! மெல்லி யர்கள்
கருங்கொண்டை! கட்டி ஈயம்!
காயாம்பூக் கொத்து! மேலும்
ஒருபக்கம் இருவா ழைப்பூ!
உயிருள்ள அழகின் மேய்ச்சல்!

அழகின் மேய்ச்சலை அறிந்துகொண் டீரா?
புலவர் மொழிகின்றார் பொருள்விளங் கிற்றா?
இருநிலா இரையுண்ணும் என்கின்றார் புலவர்!
கருங்கொண்டை இரண்டு; கட்டி ஈயம்!
தாமரை ஓர்இணை இருவா ழைப்பூ!
ஆம்,இவை புருக்கள்; அறிந்து கொள்க!
பாடலை மீண்டும் படித்து பார்க்க!
ஆடலை-அழகின் ஆடலை-அருந்துக!
அடுத்து,அவர் உலகியல் அறிவைப் பார்ப்போம்.

"வாழ்கின்றார் முப்பது முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்"

என்கிறார் புலவர். என்ன சரிதானே?
தின்கிறோம் இவற்றைத் திரும்ப நினைத்தோமா?

" வானளவும் அங்கங்கள், வானரங்கள், ராமர்கள்,
ஆனது செய்யும் அநுமார்கள், சம்பவந்தர்,
ஒன்றல்ல; ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்!
விஸ்வரூ பப்பெருமை மேலேறும் வன்மைகள்
உஸ் என்ற சத்தங்கள் அஸ்என்ற சத்தங்கள்
எவ்வளவோ நூலில் எழுதிக் கிடக்கட்டும்
செவ்வைக் கிருபை, செழுங்கருணை, அஞ்சலிக்கை
முத்தி முழுச்சுவர்க்கம் முற்றும் உரைக்கட்டும்!
இத்தனையும் சேரட்டும் என்ன பயனுண்டாம்?

—என்றே உலகியல் இயம்பக் கேண்மின்!
அன்றே எழுதியதால் ஆறேழு வடசெற்கள்
வந்து கலந்ததலால் கருத்தில் வழுவுண்டா?
சொந்த வெறுப்பின்றிச் சொல்லுவதற் காருளரே!
பொதுக்கருத்து போகட்டும்! புலவர் புகன்ற
புதுக்கருத் தொன்றைப் புரட்டிப் பார்ப்போம்!
மருமகட்கு மாமி விருந்தோம்பும் மாண்பை
அருமைத் தமிழில் அறிய உரைக்கின்றார்!

"முன்வைத்த முத்துத் தயிரிருக்கும்; பின்னறையில்
வெண்ணெய் விளாங்காய் அளவிருக்கும்—கண்ணே
மறக்கினும் அம்மாவென் றழைத்து மடிப்பால்
கறக்கப் பசுக்காத் திருக்கும்—சிறக்கவே
"சேலத்து அங்காடிச் சேயிழையார் நாள்தோறும்
வேலைக் கிடையில் மிகக்கருத்தாய்த்-தோலில்
கலந்த சுளைபிசைந்து காயவைத்து விற்கும்
இலந்தைவடை வீட்டில் இருக்கும்-மலிந்துநீர்
பாய்நாகர் கோயில் பலாச்சுளையின் வற்றலினைப்
போய்நீபார் பானையிலே பொன்போல-தேய்பிறைபோல்
கொத்தவரை வற்றல்முதல் கொட்டிவைத்தேன்; கிள்ளையே
வைத்தவரை உண்டுபின் வையாமைக்-குத்துன்பம்
உற்றிடச்செய் ஊறுகாய் ஒன்றல்ல கேட்பாய்நீ
இற்றுத்தேன் சொட்டும் எலுமிச்சை!-வற்றியவாய்
பேருரைத்தால் நீர்சுரக்கும் பேர்பெற்ற நாரத்தை!
மாரிபோல் நல்லெண்ணெய் மாறுமல்-நேருறவே
வெந்தயம் மணக்கஅதன் மேற்சாயம் போய்மணக்கும்

உந்துசுவை மாங்காயின் ஊறுகாய்-நைந்திருக்கும்
காடி மிளகாய் கறியோடும் ஊறக்கண்
ணுடியிலே இட்டுமேல் மூடிவைத்தேன்-தேடிப்பார்!

....

கீரை தயிர் இரண்டும் கேடு செயும் இரவில்!
மோரைப் பெருக்கிவிடு முப்போதும்-நேரிழையே
சோற்றை அள்ளுங்கால் துவள்வாழைத் தண்டில்உறும்
சாற்றைப்போ லேவடியத் தக்கவண்ணம்-ஊற்றுநெய்யை!
வாழை இலையின் அடி உண்பார் வலப்புறத்தில்
வீழ விரித்துக் கறிவகைகள்-சூழவைத்துக்
தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிக இனிக்கும்-பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின் சோறிட்டுத்-தக்கபடி
கேட்டும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சுமன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல் ஒண்டொடியே-கேட்டுப்போ
எக்கறியில் நாட்டம் இவர்கென்று நீயுணர்ந்தே
அக்கறியை மேன்மேலும் அள்ளிவை-விக்குவதை
நீமுன் நினைந்து நினைப்பூட்டு நீர் அருந்த!
ஈமுன்கால் சோற்றிலையில் இட்டாலும்-தீமையம்மா!
—என்றே குடும்ப விளக்கில் எழுதுகின்ற
பொன்னேர் வரிகளாற் பாவேந்தர் பூண்விளங்கும்!

அடுத்து, அவர் மனவியல் அறிவை உரைக்கிறேன்.

தந்தை குழந்தையைத் தாவி யணைத்துப்
பள்ளிக் கனுப்பும் பாங்கை உரைக்கிறார்!

"தலைவாரிப் பூச்சூடி உன்னை-பாட
சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை
சிலைபோல ஏனங்கு நின்றாய்-நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்!
விலைபோட்டு வாங்கவா முடியும்-கல்வி
வேளைதோறும் கற்று வருவதால் படியும்!
மலைவாழை யல்லவோ கல்வி-நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!
படியாத பெண்ணா யிருந்தால்-கேலி
பண்ணுவார் என்னைஇவ் வூரார் தெரிந்தால்!
கூடிகாரம் ஓடுமுன் ஓடு!-என்
கண்ணல்ல? அண்டை வீட்டுப் பெண்களோடு!

கடிதாய் இருக்குமிப் போது!-கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு-பெண்
கல்விபெண் கல்வி என்கின்ற தன்போடு!''

பள்ளிப் பிள்ளையின் பச்சை மனத்தைத்
தெள்ளத் தெளிவாய்த் தெரிந்திருந் தாலன்றி
இப்படி எழுதிட இயலுமோ புலவர்க்கே!
அப்படியே கன்னியின் மனத்தை அறிந்தவர்!

" நான்குபக்கமும் வேடர் சுற்றிட
நடுவில் சிக்கிய மான்போல்-இங்''
கேன் பிறந்தேன் இவர்கள் வீட்டில்
கரையி லிட்டதோர் மீன்போல்!''

" நூறுமுறை அவள்பார்த்தாள், அவனை! ஆளன்
நூறுமுறை நோக்கினன், இனிது பெற்ற
பேறுதனை இழப்பாள்போல் குறட்டினின்று
பெயர்த்தஅடி கீழ்ப்படியில் வைக்குமுன்னர்
ஆறுமுறை அவள்பார்த்தாள், அவனும் பார்த்தான்!
அவன்வண்டிப் படிமிதித்தான் திரும்பிப் பார்த்தான்!

இளைஞனின் இளைஞையின் இனிய மனங்களை
களைந்திடா வண்ணம் கையகப் படுத்திடும்
பெருந்திறன் பாவேந்தர் பிறப்பிலே முகிழ்த்தது!
அருந்திறன் பிறர்க்கே! அடுத்தது பாருங்கள்!

" நகைமுத்தை விரும்பு கின்றேன்;
தாலைக்கே மணக்க வேண்டும்!
வகைசெய்க அப்பா' வென் று
வாய்விட்டு நானு சொல்வேன்?
நிகரற்றாய்! உன்பெற் றோர்பால்
நீசொன்னு லென்ன வென்றான்.
' மகளுக்கு நாண மில்லை
என்பார்கள் மாட்டேன்' என்றான்.
இதைவிட மணக்கப் போகும்
இருவரின் மனத்தும் உள்ளே
புதைந்துள கருத்தை யார்தாம்
புகன்றிட வல்லார்? மற்றோர்
கதைவிடு வார்கள்; நெஞ்சக்
கருத்தினை உணர மாட்டார்!

எதைவிட? எதைநான் சொல்ல?
இன்றென்று, மணந்தோர் காதல்!

தொண்டையினில் ஒன்றுமே அடைக்கவில்லை;
துணைவனவன் சிறுகனைப்புக் கனைக்கலுற்றான்.

எத்துணை நயமாய் எடுத்துச் சொல்கிறார்!
பித்தனைப் போலப் பிதற்றவா வேண்டும்?
சமையல் செய்யும் குடும்பப் பெண்ணின்
அமைவான மனத்தை அளந்து தருகிறார்.

கொண்டவர்க் கெதுபி டிக்கும்?
குழந்தைகள் எதைவி ரும்பும்?
தண்டுன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்க தென்ன?
உண்பதில் எவரு டம்புக்
கெதுவுத வாதென் றெல்லாம்
கண்டனள்; கறிகள் தோறும்
உண்பவர் தம்மைக் கண்டாள்!

சன்னித் துடிப்பையும், கணவனை மணந்த
பெண்ணின் துடிப்பையும் பிரித்துப் பேசியோர்,
ஊருக்குச் சென்றான் ஊர்வரக் கண்டதும்,
மோருக்குள் சிலிர்க்கும் மத்தென உணர்ச்சிகள்
கொப்ப ளித்தன! ஆயினும் மாமியார்
செப்பும் பகடிக்கு உள்ளம் நாணி
ஒப்பனை செய்வதும் உலாவரத் திரிவதும்
செப்பமாய்ச் செய்யும் மருமகள் செயல்களை
ஊன்றி நோக்கி உரைப்பதைக் கேளுங்கள்.

தென்றல் அடிக்கையில் பச்சிளங் கீற்றுச்
சிலிர்த்து நிலைகுலைந் தாடுதல் போல்
இன்றைக்கு நீகொண்ட பூரிப்பின் காரணம்
என்னடி மின்னல் இடைச் சிறுக்கி?
நின்ற உன் கால்கள் நிலைக்கவில்லை கடல்
நீராய் நெளிந்தது பொன்னுடலும்!
அன்றைக்குச் சென்றவன் என்மகன் வீட்டை
அடைந்த மகிழ்ச்சித் திருக்கூத்தோ?

மாற்றியணிவதும் சேலையினை, மலர்
வாங்கி யணிவதும் கூந்தலிலே, ஒரு
காற்றென ஓடிச் சிரிக்கும் முகத்துக்குக்
கண்ணாடி காட்டிப்பின் மீளுவதும்

நேற்றில்லையே! இன்று பூரிப்ப தென்னடி
நீள் புருவத்து நிலாப் பிறைச்சி?
வேற்றூர்க்குச் சென்றவன் என்மகன் வீட்டுக்கு
மீண்ட மகிழ்ச்சித் திருக்கூத்தோ?

வெளிப்படை யாகப் பொருள்தரும் சொற்கள்!
விளக்கிடப் பிறரோ உரைகளோ வேண்டா.
துளி,பிச காத உணர்வின் தொடையல்!
தோகைக் குறும்பினை இன்னும் கேளுங்கள்:

கறிகள் சமைத்தபின் தெருவினில் விற்றிடும்
காய்களை ஓடி அழைப்பதுவும்
சிறுவிரல் மோதிரம் பார்ப்பதுவும், பார்த்து
மகிழ்வதும், செவ்விதழ் சேர்ப்பதுவும்
அறையினை நோக்கலும் நேற்றிலையே, நீ
அப்படிப் பூரிப்ப தேதுக்கடி?
பிறநகர் சென்றவன் - என்மகன் - ஊர்வரப்
பெற்ற மகிழ்ச்சித் திருக்கூத்தோ?

கச்சையை நோக்கலும், கண்கள் மலர்வதும்
கைவளை யைச்சரி செய்வதுவும்.
மொச்சை உரிக்கையில் முன்கட்டில் ஓடி, மு
ழங்கும் சிலம்படி மீளுவதும்,
பச்சைப் பசுங்கிளி தானெனக் கொஞ்சலும்
பார்த்தில னேஇன்று பூரிப்பதேன்?
அச்சீமை சென்றவன் - என்மகன் - வீட்டை
அடைத்த மகிழ்ச்சித் திருக்கூத்தோ?

மருமகள் பூரிப்பை மகிழ்வொடும் குறும்பொடும்
அருமையாய் உரைக்கும் பாவேந்தர் அருந்திறன்
எத்துணைப் பெரியது! எத்துணைச் சிறந்தது!
இத்துணைச் சிறப்பாய் எவரெடுத் துரைத்தார்?
தற்கா லத்துத் திரைப்படப் பாடலை
முக்கலும் முணகலும் முறுகலும் திருகலும்
கெக்கலி இசையொடு கேட்டுமுகஞ் சுளிக்கும்
அருவருப் புணர்ச்சியிப் பாடலில் உண்டா?
பெருமகிழ் வன்றோ பின்னிப் பிணையும்!
காசடிக் கின்ற கயவரின் கண்கள்
மாசிலா இத்தரு மாண்புடைப் பாடல்கள்
பக்கந் திரும்புமா? பயனும் விளையுமா?
எக்காலந் தந்நிலை எய்துவ திங்கே? (தொடரும்)

0: 398: நான் தமிழ் மீது கொண்டபற்றினுல் தமிழக விடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன். என்னையும் தமிழக விடுதலை இயக்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன். நான் சிறிது காலமாக எம். சி. இரா. (M.G.R.) கட்சியில் சேர்ந்து பணியாற்றினேன். நான் தென்மொழி, தமிழம், விடுதலை, போன்ற தாளிகைகளையும் மாத இதழ்களையும் படிப்பேன். என்னுடைய மனம் திரைப்படக் கவர்ச்சியில், ஈடுபட்டிருந்தது. இதுபோன்று பல நண்பர்கள் தமிழக விடுதலை இயக்கத்தில் சேர்ந்துள்ளனர். சிறிது காலமாக தமிழன் என்ற உணர்வில்லாமல் இருந்தேன். ஆனுல் இப்போது தமிழன் என்ற உணர்வோடும் அடைந்தால் தனிநாடு இல்லையேல் சுடுகாடு என்ற கொள்கையுடனும் உள்ளேன். நாங்கள் அண்மைக் காலமாக எங்கள் ஊருக்கு ஐயர் வந்தால் அவருக்கு எதிர்ப்பாக முழக்கங்களை முழங்குவோம். இதனுல் எங்கள் ஊருக்கு ஐயர்கள் வர அஞ்சுகின்றனர். அடுத்த போராட்டம் என்ன என்பதை அருள்கனிந்து தெரிவிக்க வேண்டுகிறோம். நான் தமிழக விடுதலைக்கு என் உயிரையும் தர அணியமாயிருக்கிறேன். என்னையும் இவ்வியக்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்.

—வெ. முத்தையன், அம்மேரி. நெய்வேலி–2.

0: 399: மாண்புடை ஐயா அவர்கட்கு! வணக்கம் தங்களின் மனநிலையைப் புரிந்து கொண்டுவிட்ட பின் என்மனம் தங்களையே சுற்றிச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டு அலைகிறது. இப்படிப்பட்டவர்களைத் தமிழ்நாடும் தமிழர்களும் பயன்படுத்திக் கொள்ளாமையினுல் தாழ்ந்த நிலையிலே இருக்க வேண்டிய கட்டாயம் வந்துவிடுகிறது. ஏதிலிகளான தலைவர்களை அடியொற்றிச் செல்லுகின்ற தமிழர்கள் தங்களைப் போன்ற நிறை குடத்தலைவர்களை எண்ணிப்பார்க்கக்கூட (அரசியல் வழியில் உள்ளோரும் மற்றவர்களும்) தயங்குகின்றனர். தமிழர்களுக்கு விடிவுதான் எப்போதோ? இப்போதிருக்கின்ற நிலையில் தமிழரை வழி நடத்திச் செல்லத் தங்களைத் தவிர தலைவர்களே இல்லை. சிறிதும் தளராமல் இந்தச் சமயத்தை முழுமையும் பயன்படுத்திக் கொண்டு வருங்காலத்திலாவது நமக்கு விடிவுகாண முயற்சிகளை மேற்கொண்டு எங்களுக்கு வழிகாட்ட வேண்டுகிறேன். இப்போதிருக்கின்ற நிலையில் தமிழ்நாடும் தமிழர்களும் தங்களைத்தான் நம்பியிருக்கின்றோம். எல்லாம்வல்ல இறைப் பேரருள் நமக்கு அருளும் என நம்பி முடிக்கிறேன்.

—பா. இறையெழிலன்,

உறந்தைராயன் குடிகாடு.

0: 400: இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழனை அழிக்கத் தமிழனே எண்ணுகிறுன்; செயலாற்றுகிறுன். இந்த நிலையில் உ.த.க.வின் செயன்முறைகள், தென்மொழி இயக்கச் செயற்பாடுகள் நன்மையோ, திண்மையோ தந்திடுமென நம்புகின்றீர்களா? ஒரு புறம் மாநிலத் தன்னுட்சிக் கருத்து வன்மை பெற்றுவருவது போலத் தோன்றினுலும், அதற்கு எதிர்க் கருத்தும் வன்மை பெற்று வருவதுபோலத் தோன்றுகிறது. இந்த நேரத்தில் தென்மொழி இயக்கச் சார்பான கருத்து 'தனியாட்சி' என்பது நிறைவேறும் என்ற நம்பிக்கை பெறுதற்கான வாய்ப்புகள் உள்ளனவா? அப்படி மனதில் படுகின்றதா? மக்களிடையே-ஏன்- ஆசிரியர்களிடையே

(அடுத்த பக்கம் பார்க்க)

பாவாணர் ஐயா அவர்களின் மொழி மேம்பாட்டுப்பணி ஏற்புடையன வாகத் தெரியவில்லை. (என் கருத்து இதுவன்று; காலங்கனியும் எனும் நம்பிக்கையுடையவன் நான்.) தனித்தமிழுணர்ச்சி போதுமான அளவில் எவரிடத்தும் நிலவிய பாடில்லை. நல்லபேச்சு, செயலாக எவரும் நினைப்பதில்லை. மிக நெருங்கியவர்களிடத்திலேயே பேச்சொன்று செயலொன்றுக உள்ளது. மேல்மட்ட நிலையும் இதுதானே?

—ந. அருணன் அரங்காட்டுப்பாளையம். கோவை மா.வ.

0: 401: அன்பும் பண்பும் ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற தானைத் தலைவர் ஐயா அவர்களுக்கு எங்களின் தாழ்மையான வணக்கங்கள். நாங்கள் தமிழ்க்கல்லூரியில் நிறைநிலை படித்துக் கொண்டிருப்பவர்கள். முன்பு அழகப்பர் கலைக் கல்லூரி அன்பர்களிடம் தென்மொழி பெற்று வந்தோம். இவ்வாண்டு அவர்களிடம் பெறு கின்ற சூழ்நிலையில்லை. அங்குள்ள தமிழியக்கப் பாசறை ஓரளவாகத் தான் இயங்கி வருகிறது. சென்ற ஆண்டிலிருந்து எங்கள் கல்லூரியி லும் பாசறை அமைத்துச் செயல் பட்டு வருகிறோம். ஆனுல் இவ்வகைச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது நமக்குப் பெரும்பாலும் மனத் தொய்வுதான் ஏற்படுகின்றது. எனினும் விடாமுயற்சியோடு செயல் பட்டு வருகின்றோம்.

தந்தை பெரியார் அவர்கள் கடைசிக் கட்டத்தில் முயற்சியோடு இறங்கி மாநாடுகள் நடத்தித் தனித் தமிழ் நாட்டிற்கான வழி முறைகளை கூறிவிட்டு நம்மைத் தனித்து விட்டுவிட்டுச் சென்று விட்டார். அய்யா! இவ்வளவு நாட்களாகியும், நாமும் எவ்வளவோ முயற்சிகள் செய்தும், பெரியார் ஒருவர் தம் வாழ்நாள் முழுமையும் செலவிட்டும் ஆரியக் கொட்டங்கள் அடங்கிய பாடாயில்லை. தந்தையார் இயற்கை எய்திய அன்று ஆரியப்பார்ப்பனர்கள் இனிப்பு வழங்கி இருக்கிறார்கள். அரசியல், கலை, இலக்கியம் அனைத்தையுமே தமதாக்கிக் கொண்டு கொட்டமடித்து வரும் ஆரிய ஆர்ப்பாட்டத் திற்கு முடிவு நாள்தான் என்று? அத்தகைய நாள் வருமா? என் போன்ற இளைஞர்களின் மக்கள், பேரப்பிள்ளைகளாவது உரிமையான தமிழ் நாட்டில் வாழ்வார்களா? அய்யா! தங்களின் காலத்திலேயே நாட்டிற்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும். தாங்கள் அதற்கான பணியில் விரைந்து செயல்படுவீர்கள் என்று தன்மானத் தமிழர்கள் பலர் நம்பிக் கிடக்கிறார்கள். அதற்கு ஒரு முடிவு காணுவீர்கள் எனத் தமிழர்களாகிய நாங்கள் எதிர் நோக்கி இருக்கிறோம். திருச்சி மாநாட்டின் அடிப்படையில் பணிகள் நடந்து வருகின்றனவா என்று என் போன்றோர் கேட்பதைத் தாங்கள் தவருகக் கருத மாட்டீர்கள் என்றே எண்ணுகிறேன். நாம் வாழுகின்ற இனத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்வோம்; மக்களென்னும் செம்மறிக் கூட்டத்தைப்பற்றிக் கவலையில்லை.

செ. ப. நெடுமாறன், சு. தமிழரிமா
இராமசாமித் தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.